**தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள், 2022–2023 ஆம் ஆண்டிற்கான வரவு– செலவுத் திட்ட மதிப்பீடுகளை 2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இந்த பெருமைமிகு பேரவையில் முன்வைக்கும் இந்த நேரத்தில், நமது மாநிலம் எவ்வாறு திகழ வேண்டும் என்று இந்த அரசு விரும்புகின்றது என்பதை, காலத்தை வென்று நிற்கும் அய்யன் திருவள்ளுவரின் குறள் ஒன்றைக் குறிப்பிட்டு, எனது உரையை தொடங்க விரும்புகின்றேன்.

**பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து**

**(குறள் –738)**

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு.

2) கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நான் தாக்கல் செய்தபோது பல்வேறு புதிய திட்டங்கள், அறிவிப்புகள், சீர்திருத்தங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்தேன். அவற்றில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த மனநிறைவுடன் நான் எனது இரண்டாவது வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இந்த அவையின் முன் வைக்கின்றேன். தமிழர் மரபு, பண்பாடு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, நான் எனது முன்னோர்களையும், அரசியல் ஆசான்களையும், எனக்கு முன்னர் இந்தப் பொறுப்பை வகித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களையும் வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் திராவிடக் கொள்கைகளுக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பு, தமிழ்ச் சமூகத்திற்குச் செய்த சேவை ஆகியவற்றின் காரணமாகவே இன்று இம்மாமன்றத்தில் நான் உரையாற்றிக் கொண்டிருக்கிறேன்.

3) என்னுடைய பொதுவாழ்வில் என்றென்றும் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து, கலங்கரை விளக்கமாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மே மாதத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து இன்றுவரை நாங்கள் நிதி மேலாண்மையில் அடைந்துள்ள

சாதனைகள் அனைத்துமே அவரது வழிகாட்டுதலாலும், முழு ஆதரவினாலும் மட்டுமே எய்தப்பட்டவையாகும். இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தொடங்கும்போது, **"இன்றைய சூழல்களை மட்டும் கருத்திற்கொள்ளாமல் தமிழ்நாட்டின் வருங்கால சந்ததியினரின் நலத்தையும் கருத்தில் கொண்டு தயாரிக்க வேண்டும்"** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். அதை மனத்தில் கொண்டு இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

4) கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் இந்த அரசு அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வருவதற்கு வாக்களித்தனர். கோவிட் பெருந்தொற்றின் முதல் அலை பரவலைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிக வீரியத்துடன் இரண்டாம் அலை பரவியிருந்த நேரத்தில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றோம். அத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே ஐந்து தேர்தல் வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து மீதமுள்ள தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்ற ஒரு தொலைநோக்குத் திட்டத்தையும் வகுத்துள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டு இந்த அரசு, **வரலாறு காணாத வேகத்தில் தேர்தல் வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.**

இவை மட்டுமின்றி, கடந்த ஆண்டு நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட சட்டமன்றக் கூட்டத் தொடரில் பல முக்கியமான அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளது.

5) பதவியேற்ற நாளிலிருந்து இந்த அரசு கோவிட் பெருந்தொற்று, மழை வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களை சந்திக்க நேர்ந்தது. 2015 ஆம் ஆண்டில் பெய்த மழையால் சென்னை பெரும் பாதிப்புக்குள்ளானது. அதைக்காட்டிலும் 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தின் பல பகுதிகளில் மிக அதிகமான மழைப்பொழிவு நிகழ்ந்தது. இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி நடவடிக்கைகளாலும், கள ஆய்வுகளாலும், இழப்புகளும் இறப்புகளும் கட்டுப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து, கொரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலையை (ஓமிக்ரான்) தமிழ்நாடு சந்தித்தது. இந்த அரசால் இரண்டாம் அலையின் போது ஏற்படுத்தப்பட்ட கூடுதல் மருத்துவக் கட்டமைப்புகளும், கற்றுக்கொண்ட அனுபவத்தின் பயனாலும் மூன்றாவது அலை மிகச்சிறப்பான முறையில் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், இந்த எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்கனவே மோசமான நிலையில் இருந்த மாநில நிதிநிலையில் மேலும் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியது.

6) எதிர்பாராமல் பெருமளவில் செலவினங்கள் ஏற்பட்ட போதிலும், சிறந்த நிதி நிருவாகத்தையும் நிதி மேலாண்மையையும் அரசு கடைப்பிடித்தது. **இதன் பயனாக, மொத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வெறும் ஒரு சதவீதம் உயர்வினையே முதல் துணைநிலை மதிப்பீடுகளில் கோரினோம்**.

7) 2014 ஆம் ஆண்டு முதல், வருவாய்ப் பற்றாக்குறை அச்சுறுத்தும் வகையில் ஆண்டுதோறும் அதிகரித்து வந்துள்ளது. **முதன்முறையாக இந்த ஆண்டு இந்த நிலை மாற்றப்பட்டு, 7,000 கோடி ரூபாய்க்கும் மேல் தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை குறைய உள்ளது. மேலும் இந்த சவாலான ஆண்டிலும் நிதிப் பற்றாக்குறை 4.61 சதவீதத்திலிருந்து 3.80 சதவீதமாக குறைய உள்ளது**. இந்த அரசின் தீர்க்கமான நடவடிக்கைகளும் நிர்வாகத் திறனுமே இதனை சாத்தியமாக்கியுள்ளது.

8) இந்த உறுதியான நடவடிக்கைகளின் அடித்தளமாக இருப்பவர் திராவிட மாதிரி வளர்ச்சியின் (Dravidian Model) இலக்கணமாகத் திகழ்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே. அவரின் ஒவ்வொரு சிந்தனையிலும், செயலிலும், சுயமரியாதை, சமூகநீதி, சமூக நல்லிணக்கம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய திராவிடக் கொள்கைகள் நிறைந்திருக்கின்றன. திராவிட இயக்கத்தின் கோட்பாடுகளே

இந்த அரசின் ஆணிவேராகும். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனைகளும், செயல்களும், எழுத்துக்களும் இந்த அரசை சிறப்பாக வழிநடத்தி வருகின்றன. திராவிட இயக்கம் சமூகநீதிக்கான போராட்டத்தில் குறிப்பிடத்தக்க சாதனைகள் பல புரிந்த போதிலும், இப்போராட்டத்தில் நாம் இன்னும் முழுமையாக வெற்றி அடையவில்லை. எனவே, அனைத்து தளங்களிலும் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற நமது கொள்கையில் நாம் தொடர்ந்து உறுதியாக இருப்போம்.

9) அண்மையில், தாமிரபரணி படுகையில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், **பண்டைத் தமிழ் நாகரிகத்தின் தொன்மை, குறைந்தது 3200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என வெளிப்படுத்தியுள்ளன**. உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களில் நமது தமிழர் நாகரிகமும் ஒன்று என்பதை இது உறுதி செய்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, தமிழ்ச் சமுதாயத்தின் நீண்ட நெடிய பண்பாட்டின் வழித்தோன்றல் என்றே தன்னைக் கருதுகிறது. நம் நாட்டின் பன்முகப் பண்பாட்டை பாசிச சக்திகள் அழிக்க முயலும் இவ்வேளையில், தமிழ்ச் சமூகத்தை வெற்றிகரமாக வழிநடத்த வேண்டிய வரலாற்றுக் கடமை இந்த அரசுக்கு உள்ளது என்பதை நன்கு உணர்ந்துள்ளோம்.

10) ஒன்றிய-மாநில நிதி உறவுகள், தரவு அடிப்படையிலான ஆளுகை (Data Centric Governance), அரசு உடைமைகள் மற்றும் இடர் மேலாண்மை (Asset & Risk Management), அதிக பொறுப்புடைமை மற்றும் உற்பத்தித்திறன் (Increased Accountability and Productivity), சட்டமன்றத்தின் பங்கினை வலுப்படுத்துதல் ஆகிய ஐந்து முக்கிய முன்னெடுப்புகளை, இந்த அரசு நிருவாகத் திறனை உயர்த்துவதற்காக மேற்கொள்ளும் என்று கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்தோம். இந்த ஒவ்வொரு முன்னெடுப்பிலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஒன்றிய-மாநில நிதி உறவுகளை ஆய்வு செய்ய சிறப்பு ஆலோசனைக் குழு அமைத்தல், தரவுத் தூய்மை (data purity) திட்டச் செயலாக்கம், மாநிலத்தின் உள்தணிக்கை அமைப்புகளை சீரமைத்தல் போன்றவை செயல்படுத்தப்பட்டுள்ளன.

11) அண்மையில் நடைபெற்ற நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்பாட்டையும் தலைமைப் பண்பையும் மக்கள் எந்த அளவிற்கு அங்கீகரித்துள்ளனர் என்பதையும் தமிழ்ச் சமுதாயம் அவர் மீது

கொண்டுள்ள நம்பிக்கையையும் பறைசாற்றுகிறது. இது எங்களின் உழைப்பை பன்மடங்கு அதிகரிக்க ஊக்கமளிக்கிறது.

12) **இந்தியா மாநிலங்களின் ஒன்றியம் என்பதே நமது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்**. நமது அரசமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள் மாநில சுயாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஒரு இணக்கமான உறவை வடிவமைத்தனர். நமது நாட்டின் கூட்டாட்சி அமைப்பை சீர்குலைக்க எடுக்கப்படும் தொடர் முயற்சிகள் வருத்தத்தையும், வேதனையையும் அளிக்கின்றன. மாநிலங்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, மாநிலங்களின் உரிமைகளுக்காக இந்த அரசு தொடர்ந்து போராடும்.

13) வரும் நிதியாண்டு மிகவும் இக்கட்டான, பொருளாதார நிச்சயமற்ற தன்மையுடன் இருக்க வாய்ப்புகள் அதிகம். தற்போது உக்ரைனில் நடைபெற்றும் வரும் போரின் காரணமாக உலகளாவிய பொருளாதார மீட்டெடுப்பு தடைபட வாய்ப்புள்ளது. இதனால் நுகர்வு தேவையில் வீழ்ச்சியும் (demand shocks), உலகளாவிய அளிப்பிலுள்ள பாதிப்புகளும் (global supply disruptions), மாநிலப் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தலாம். பணவீக்கம், வட்டி வீதம் ஆகியவை

அதிகரிக்குமென பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். மேலும், கோவிட் பெருந்தொற்றின் தாக்கமும் முற்றிலுமாக நீங்கிவிட்டது என்று தற்போது கூற இயலாது. இது மட்டுமின்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் முழு இழப்பை அரசு ஏற்பதன் விளைவையும், அகவிலைப்படி உயர்த்தப்பட்டதன் முழு தாக்கத்தையும், கடன் தள்ளுபடியின் தாக்கத்தையும் வரும் நிதியாண்டில் இந்த அரசு சந்திக்க நேரிடும்.

14) இத்தகைய நிகழ்வுகளைக் கருத்தில்கொண்டு, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி முன்னுரிமைகளை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நமது அரசியல் முன்னோர்களான நீதிக்கட்சியின் காலத்திலிருந்தே, சமூகநீதிக்கான அளவுகோல் திராவிட இயக்கத்திற்கான அடையாளமாகத் திகழ்ந்து வருகின்றன. பொருளாதாரப் பார்வையில் சமூகநலனுக்கும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கும் சம முக்கியத்துவம் அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது. கடந்த ஆண்டில் பெருந்தொற்றின் காரணமாக சமூகத்தில் நலிந்த பிரிவினர்களின் துயர் துடைப்பதை குறிக்கோளாகக் கொண்டு நாம் பணியாற்றினோம். தற்போது, **நமது பொருளாதாரம் மீண்டும் எழுச்சி பெற்று வர, சமூகநலத் திட்டங்களில் எவ்விதக் குறையுமின்றி, நமது முன்னுரிமைகளை**

**மறுபரிசீலித்து சமூகக் கட்டமைப்பு, வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றின் மீது அதிக கவனம் செலுத்தப்படும்**.

15) மேற்கூறிய அணுகுமுறையின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளுக்கும் திட்டங்களுக்கும் போதிய நிதி வழங்கி, வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் விதமாக இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டம் பின்வரும் பொருண்மைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தும்:

- வேளாண்மை உள்ளிட்ட முதன்மைத் துறைகளின் வளர்ச்சி வீதத்தை அதிகரித்தல்.
- சமூகப் பாதுகாப்பினை வலுப்படுத்துதல்
- பள்ளி மற்றும் கல்லூரிகளில் சிறப்புத் திட்டங்கள் வாயிலாக இளைஞர்களுக்கு வேலை பெறும் திறனை அதிகரித்தல்
- புதிய முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமும் தற்போதிருக்கும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் வாயிலாகவும் அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

- கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டின் மூலம் மகளிரின் முன்னேற்றம்.
- விளிம்பு நிலையில் உள்ளோரின் சமூக-பொருளாதார முன்னேற்றம்.
- அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலம் வறுமையை ஒழித்தல்
- அனைத்துத் தளங்களிலும் சமூகநீதியை நிலைநாட்டுதல்
- தரவுகள் அடிப்படையிலான ஆளுகை வாயிலாக பொதுமக்களுக்கு மானியங்களும் சேவைகளும் முழுமையாகச் சென்றடைவதை உறுதிசெய்தல்
- கட்டமைப்புகள் உருவாக்க போதிய நிதி ஆதாரங்களைக் கண்டறிதல்
- சுற்றுச்சூழலில் நீடித்த நிலைத்த தன்மையையும், தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவத்தையும் உறுதிசெய்தல்

## முதல்வரின் முகவரி

16) பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்தும், தேவைகளை நிறைவு செய்தும், மக்கள் நல அரசின் இலக்கணமாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இந்த நோக்கத்தோடுதான், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையையும், முதலமைச்சரின் தனிப் பிரிவையும் (CM Cell)

இணைத்து "முதல்வரின் முகவரி" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் **இதுவரை, 10,01,883 மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டுள்ளது**.

**ஒன்றிய–மாநில நிதி உறவுகள்**

17) மதிப்புக் கூட்டு வரி நடைமுறையில் இருந்தபோது, தமிழ்நாடு அடைந்த வருவாய் வளர்ச்சியை, சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் எட்ட இயலவில்லை. இதுமட்டுமின்றி, கோவிட் பெருந்தொற்று அனைத்து மாநிலங்களின் நிதிநிலையை பெருமளவில் பாதித்துள்ளது. இந்நிலையில், **சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டை ஒன்றிய அரசு வழங்கும் கால வரையறை 30.6.2022 ஆம் நாளன்று முடிவுக்கு வருகிறது. இதனால், வரும் நிதியாண்டில், சுமார் 20,000 கோடி ரூபாய் நிதி இழப்பினை தமிழ்நாடு சந்திக்க நேரிடும்**. கொரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்க நிலையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் வருவாய் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பாததால், இந்த இழப்பீட்டை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்குமாறு ஒன்றிய அரசிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த நியாயமான கோரிக்கைக்கு ஒன்றிய அரசு செவி சாய்க்கும் என நம்புகிறேன்.

18) நாட்டின் மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் பங்கு 6.12 சதவீதமாகும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 10 சதவீதமாகும். இவற்றிற்கு ஏற்ற நிதிப்பகிர்வை மத்திய நிதிக்குழுக்கள் தமிழ்நாட்டிற்கு வழங்கவில்லை. 15வது மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி, மாநிலங்களுக்கு இடையேயான நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு வெறும் 4.079 சதவீதமாகும். 15வது மத்திய நிதிக்குழு ஐந்தாண்டு காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியமாக மொத்தம் 21,246 கோடி ரூபாயை பரிந்துரைத்துள்ளது. இத்தொகையானது, 14வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 17,010 கோடி ரூபாய் மானியங்களைக் காட்டிலும் குறைந்த அளவிலேயே அதிகரிக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கு குறிப்பிட்ட மானியங்களையும், துறைகளுக்கு குறிப்பிட்ட மானியங்களையும் 15வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. இத்தொகையை நடைமுறையிலுள்ள ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுடனும் (Centrally Sponsored Schemes) ஒன்றிய துறைத் திட்டங்களுடனும் (Central Sector Schemes) இணைக்காமல், தனியாக வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

**மாநில நிதிக்குழு**

19) பெருந்தொற்றின் காரணமாக, ஆறாவது மாநில நிதிக் குழுவின் காலவரை இந்த அரசால் ஒன்பது மாதங்கள்

நீட்டிக்கப்பட்டது. அண்மையில் இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையின்மீது, அரசு தனது நடவடிக்கை எடுத்த அறிக்கையை (Action Taken Report) விரைவில் இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யும்.

## தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

20) எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று தமிழ் மொழியைப் போற்றி, அதனை உலகெங்கும் பரவச் செய்வதே இந்த அரசின் தலையாய குறிக்கோளாகும். தமிழ்மொழியின் தொன்மையையும் செம்மையையும் நிலைநாட்டிட, பிற உலக மொழிகளுடன் தமிழின் மொழியியல் உறவு குறித்து அறிவியல் பூர்வமான ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும். **தமிழ் மொழிக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்திற்கும் இடையிலான உறவை வெளிக்கொணரும் வகையில், தமிழ் வேர்ச்சொல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அகரமுதலி உருவாக்கும் சிறப்புத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும்**. இத்திட்டத்திற்காக, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

21) தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநிறுத்திடவும், பகுத்தறிவைப் பரப்பிடவும், பெண்ணடிமைத்தனத்தை

ஒழித்திடவும் தம் கடைசி மூச்சு இருக்கும்வரை அயராது உழைத்தவர் தந்தை பெரியார். அவரின் சிந்தனைகளும் எழுத்துக்களும் காலத்தை வென்று இன்றும் ஒளிர்கின்றன. தனித்துவமிக்க அவரது எழுத்துகளை எட்டுத்திக்கும் எடுத்துச் சென்று, அவரது முற்போக்குச் சிந்தனையால் அனைவரையும் பயனடையச் செய்வது இந்த அரசின் கடமையாகும். இதனை நிறைவேற்றும் விதமாக, உரிய அறிஞர் குழுவின் பரிந்துரைகளின்படி, **பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு, 21 இந்திய, உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளாகவும் வெளியிடப்படும்**. இப்பணிகள் ஐந்து கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

22) தாய்மொழி கல்வியே தலைசிறந்த கல்வி என்பது அறிவியல் கூறும் உண்மையாகும். தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பாடநூல், நோட்டுப்புத்தகம் போன்ற நலத்திட்ட உதவிகள், அரசு நிதியுதவியின்றிச் செயல்பட்டு வரும், தமிழ்வழியில் மட்டும் பாடங்களைக் கற்பிக்கும் பள்ளிகளில் இலவசமாக 1 முதல் 10 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு, இந்த ஆண்டு முதல் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

23) மாநிலத் தொல்லியல் துறை கடந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம் கீழடி, தூத்துக்குடி மாவட்டம் சிவகளை, அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளுடன் திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, தர்மபுரி மாவட்டம் பெரும்பாலை ஆகிய மூன்று இடங்கள் உட்பட ஏழு இடங்களில் நடப்பாண்டில் அகழாய்வுகளை மேற்கொள்கின்றது. மேலும், **புதிய கற்கால இடங்களைத் தேடி 5 மாவட்டங்களில் கள ஆய்வும் (exploration), பொருநை ஆற்றங்கரையில் தொல்லியல் இடங்களைத் தேடிக் கள ஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது**.

24) இடைச் சங்க கால பாண்டியர்களின் துறைமுகமாக விளங்கிய கொற்கையில் ஆழ்கடலாய்வு மேற்கொள்வதற்கு உகந்த இடத்தினை கண்டறிவதற்கு இந்திய கடல்சார் பல்கலைக் கழகம் மற்றும் தேசிய கடல்சார் தொழில் நுட்பக் கழகத்துடன் இணைந்து இந்த ஆண்டு முன்கள ஆய்வு (reconnaissance) மேற்கொள்ளப்பட உள்ளது. ஏழு இடங்களில் அகழாய்வுப் பணிகள், இரண்டு இடங்களில் கள ஆய்வு மற்றும் கொற்கையில் முன்கள ஆய்வுப்பணிகள் ஐந்து கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

25) பொதுமக்கள், குறிப்பாக மாணவர்களிடையே தமிழ் தொல்லியல் மரபு குறித்து ஆர்வத்தை ஏற்படுத்திடவும், நமது மாநிலத்தில் கிடைத்துள்ள அரும்பொருட்களைப் பேணிப் பாதுகாக்கவும், அருங்காட்சியகங்களும், அகழ்வைப்பகங்களும் (on-site museums) மேம்படுத்தப்பட வேண்டும். இவ்வாண்டு, **விழுப்புரம், இராமநாதபுரம் மாவட்டங்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அரசு அருங்காட்சியகங்கள் அமைக்கப்படும். தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் அகழ்வைப்பகம், திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள தொல்பழங்கால அகழ்வைப்பகம், தர்மபுரியில் உள்ள நடுகற்கள் அகழ்வைப்பகம் ஆகியவை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**.

26) மாநிலத்தில் உள்ள பழமையான பொதுக் கட்டடங்களை அவற்றின் தனித்துவம் மாறாமல் புனரமைத்து, பாதுகாக்கும் பொருட்டு இக்கட்டடங்களைச் சீரமைப்பதற்கு இவ்வாண்டு சிறப்பு ஒதுக்கீடாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

27) இம்மதிப்பீடுகளில் தமிழ் வளர்ச்சித் துறைக்கு 82.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை

28) அரசு நிலங்களில் நில அளவைப் பணிகள் துல்லியமாகவும் எளிதாகவும் மேற்கொள்ள, "தொடர்ந்து இயங்கும் தொடர்பு நிலையங்களின் (Continuously Operating Reference Stations) அமைப்பு" வலுப்படுத்தப்படும். நவீன முறையில் நிலஅளவைப் பணிகளை மேற்கொள்ள நிலஅளவையர்களுக்கு "ரோவர்" (Rover Machine) கருவிகள் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 15 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.

29) பரவலான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் அரசு நிலங்களின் பயன்பாடு அமைவது அவசியம். அரசு நிலங்களின் குத்தகை முறையில் தற்போது உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், அரசு நிலங்களை நியாயமான, வெளிப்படையான முறையில் குத்தகைக்கு விடுவதற்கும் ஒரு விரிவான நிலக் குத்தகைக் கொள்கை வகுக்கப்படும்.

30) நீர்நிலைகள் உள்ளிட்ட அரசு நிலங்களை மீட்டெடுக்கவும், பாதுகாப்பதற்கும் அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. **அரசு நிலங்களைப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும், ஆக்கிரமிப்புகளில் இருந்து மீட்பதற்கான பணிகளை மேற்கொள்ளவும், சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

31) சென்னை பெருநகரப் பகுதியில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு, தக்க பரிந்துரைகளை வழங்க ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி, வெள்ளத்தடுப்புப் பணிகள் முதற்கட்டமாக 1,000 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்பணிகளுக்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

32) வானிலையைத் துல்லியமாகக் கணிக்க, "பேரிடர் எச்சரிக்கை அமைப்புகளை" மேம்படுத்துவதன் அவசியத்தை, அண்மையில் சென்னையில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு நமக்கு உணர்த்தியுள்ளது. பேரிடர் தாக்கும் முன், உரிய நேரத்தில் எச்சரிக்கையை வழங்குவதற்கு, வானிலை பலூன் அமைப்பு, இரண்டு வானிலை ரேடார்கள், 100 தானியங்கி வானிலை மையங்கள், 400 தானியங்கி மழைமானிகள், 11 தானியங்கி நீர்மட்டக் கருவிகள், அதிவேகக் கணினிகள் (super computers) உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்கள் கொண்ட ஓர் கட்டமைப்பை அரசு உருவாக்கும். இப்பணிகளுக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33) சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ளோரின் நலனிற்காக அரசால் செயல்படுத்தப்படும் முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம், மாற்றுத்திறனாளி

ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்காக 4,816 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

34) இம்மதிப்பீடுகளில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு 7,474.94 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**காவல்**

35) சட்டம் ஒழுங்கைத் திறம்பட நிலைநாட்டுவதன் வாயிலாக தமிழ்நாடு ஓர் அமைதிப்பூங்காவாகத் திகழ்கிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், போதைப் பொருட்களின் பயன்பாடு ஆகியவற்றைத் தடுப்பதற்கு இந்த அரசு தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றது. வளர்ந்து வரும் புறநகர்ப் பகுதிகளில் காவல்துறை திறம்படச் செயலாற்றிட, சென்னை காவல் ஆணையரகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆவடியிலும், தாம்பரத்திலும் இரண்டு புதிய ஆணையரகங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், இத்துறைக்குத் தேவைப்படும் அனைத்துக் கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்படும். இந்த வகையில், சமூக ஊடகங்களில் செய்யப்படும், தவறான பிரச்சாரங்களின் விளைவாக, அதிகரித்து வரும் குற்றச்செயல்களைத் தடுத்திட, “சமூக ஊடக சிறப்பு மையம்” அமைக்கப்படும்.

36) இம்மதிப்பீடுகளில் காவல் துறைக்கு 10,285.22 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

37) தீ விபத்துகளைத் தவிர்ப்பதை இலக்காகக் கொண்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. 2021ஆம் ஆண்டில், இத்துறை மொத்தமாக 16,809 தீ விபத்து அழைப்புகள் மற்றும், 57,451 மீட்புப் பணி அழைப்புகளை ஏற்று, எண்ணற்ற மனித உயிர்களையும், கால்நடை மற்றும் உடைமைகளையும் காப்பாற்றியுள்ளது.

38) இம்மதிப்பீட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்காக 496.52 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**நீதி நிருவாகம்**

39) வழக்குகளை விரைந்து முடித்து, தாமதமின்றி தீர்ப்புகளை வழங்கிட, நீதித்துறைக்கு அனைத்து ஆதரவையும் இந்த அரசு வழங்குகின்றது. வணிக வழக்குகளை விசாரிப்பதற்கென ஏழு வணிக நீதிமன்றங்கள் அமைத்திட, இந்த நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

40) இம்மதிப்பீட்டில் நீதி நிருவாகத் துறைக்கென 1,461.97 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு**

41) **பயிர்க்கடன் தள்ளுபடிக்காக 2,531 கோடி ரூபாயும், நகைக்கடன் தள்ளுபடிக்காக 1,000 கோடி ரூபாயும், சுய உதவிக்குழுக்களின் கடன்கள் தள்ளுபடிக்காக 600 கோடி ரூபாயும் என இம்மதிப்பீட்டில் மொத்தம் 4,131 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**.

42) இந்த நிதியாண்டில், இதுவரை 14,15,916 விவசாயிகளுக்கு 9,773 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், 10,76,096 குறு, சிறு விவசாயிகளுக்கு 7,428 கோடி ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்ட பயிர்க்கடன்களும் அடங்கும்.

43) நாட்டிலேயே முதல்முறையாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டியில்லா பயிர்க்கடன் திட்டத்திற்கு, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டத்தில் உணவு மானியமாக 7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

44) இம்மதிப்பீட்டில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு 13,176.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பாசனம்**

45) நடப்பாண்டில், கால்வாய்கள், ஏரிகள், நீர்நிலைகளையும் நீர் வழித்தடங்களையும் மறுசீரமைத்தல், தடுப்பணைகள், கதவணைகள், தரைகீழ் தடுப்பணைகள் போன்ற நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளை ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக, இம்மதிப்பீடுகளில் 2,787 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

46) நீர்வளங்களின் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கவும், சிறப்பாக மேலாண்மை செய்வதற்காகவும், பாசனத்திற்காக நீரை தங்குதடையின்றி வழங்குவதற்காகவும், 3,384 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி வடிநிலப் பகுதியில் உள்ள பாசன அமைப்புகளில் நீட்டித்தல், புனரமைத்தல், நவீனமயமாக்குதல் போன்ற பணிகள் (ERM) விரைவில் தொடங்கப்பட உள்ளன.

47) சாத்தனூர், சோலையார், மேட்டூர், பாபநாசம் உள்ளிட்ட 64 பெரிய அணைகளை புனரமைக்கவும்,

அணைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும் இரண்டாம் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு (DRIP-II) திட்டத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. உலகவங்கி மற்றும் ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உதவியுடன் 1,064 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக, இம்மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

48) வரும் குறுவை சாகுபடிக்கு கடைமடைப் பகுதிகள் வரை காவிரி நீர் சென்றடைய, **டெல்டா பகுதியிலுள்ள 10 மாவட்டங்களில் 80 கோடி ரூபாய் செலவில் 4,964 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களை தூர்வாரும் சிறப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்புதலை இந்த அரசு அளித்துள்ளது**. இவ்வாண்டு முன்கூட்டியே திட்டமிடுதல் மூலம், பாசனத்திற்காக மேட்டூர் அணை திறப்பதற்கு முன்னரே இந்தப் பணிகள் துரிதமாக நிறைவேற்றப்படும்.

49) இம்மதிப்பீடுகளில் நீர்வளத் துறைக்கு 7,338.36 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு**

50) **"வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்"** என்று பல்லுயிர் ஓம்பிய வள்ளலார் அவர்களின் 200வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, ஆதரவில்லாத கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவியளிப்பதற்கு **"வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்"** என்னும் புதிய திட்டம் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். இத்திட்டத்திற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

51) இம்மதிப்பீடுகளில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1,314.84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம்**

52) தாவரவியல் பூங்காக்கள், பல்லுயிரினங்களின் இருப்பிடங்களாகவும், பொதுமக்களுக்கான பொழுதுபோக்கு மையங்களாகவும் திகழ்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, **லண்டன் க்யூ பூங்கா (Kew Gardens) அமைப்புடன் இணைந்து சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்**. இதற்கான விரிவான திட்ட அறிக்கை இவ்வாண்டு தயாரிக்கப்படும்.

53) காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் இடர் தணிக்கும் திட்டங்கள் மற்றும் பசுமையாக்கும் திட்டங்களுக்கு போதிய நிதியினை அளித்திடவும், **"தமிழ்நாடு பசுமைக் காலநிலை மாற்ற நிதியத்தை"** அரசு உருவாக்கும். இந்நிதியத்தின் மூலம், வளர்ச்சி நிதி நிறுவனங்கள், பன்னாட்டு காலநிலை மாற்ற நிதியங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்களிலிருந்து நிதி திரட்டப்படும்.

54) தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடுகளைப் பாதுகாத்தல், அவற்றின் வாழ்விடத்தை விரிவுபடுத்துதல், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் **"வரையாடு பாதுகாப்புத் திட்டத்தை"** அரசு செயல்படுத்தும். இத்திட்டத்திற்கு, முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

55) இளம் வயதிலிருந்தே வனம் மற்றும் வன விலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்த, **கிண்டி குழந்தைகள் பூங்காவை மறுவடிவமைத்து, பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் உள்ளடங்கிய இயற்கைப் பூங்காவாக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது**. இதற்கான விரிவான திட்ட அறிக்கை இந்த ஆண்டில் தயாரிக்கப்படும்.

56) வனப் பாதுகாப்பு, பசுமைப் பரப்பை அதிகரித்தல், வன மேலாண்மையில் பழங்குடியினரை ஈடுபடுத்துதல், மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையேயான மோதல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், வனத்துறையில் திறன் மேம்பாடு குறித்த கொள்கை மாற்றங்கள் ஆகியவற்றை அரசிற்குப் பரிந்துரைக்க வன ஆணையம் ஒன்றை அரசு அமைக்கும்.

57) அணிநிழல் காடுகளும், எழில்மிகு சூழல் சுற்றுலா தலங்களும் நிறைந்தது தமிழ்நாடு. வனங்களுக்குப் பாதகமின்றி சுற்றுச்சூழல் சுற்றுலாவை (Eco-Tourism) ஊக்குவிப்பது அரசின் கொள்கையாகும். இதன் அடிப்படையில், சேத்துமடை (கோயம்புத்தூர் மாவட்டம்), மணவனூர் மற்றும் தடியன் குடிசை (திண்டுக்கல் மாவட்டம்), ஏலகிரி (திருப்பத்தூர் மாவட்டம்) ஆகிய பகுதிகள் சூழல் சுற்றுலாத் தலங்களாக தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தப்படும். தங்கும் இடங்கள், வனங்களைப் பற்றிய விழிப்புணர்வு மையங்கள் போன்ற பல வசதிகள் இத்தலங்களில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் வரும் வருவாய் அப்பகுதியின் வளர்ச்சிக்காகச் செலவிடப்படும்.

58) இம்மதிப்பீடுகளில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறைக்கு 849.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பள்ளிக்கல்வித் துறை

59) கடந்த இரண்டு ஆண்டுகள் பெருந்தொற்றால் பள்ளிகள் மூடப்பட்டிருந்ததன் காரணமாக, மாணவர்களிடையே ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்யும் வகையில் "இல்லம் தேடிக் கல்வி" என்ற சிறப்பான முன்னோடிக் கல்வித் திட்டம் 38 மாவட்டங்களில் 1.8 இலட்சம் தன்னார்வலர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் நமது நாட்டிற்கே ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. இதன் வாயிலாக 30 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக பெருந்தொற்றால் பெருமளவில் கல்வி கற்றலில் இழப்பு ஏற்பட்டுள்ளதால், இத்திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக, 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

60) அரசுப் பள்ளி மாணவர்கள், புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் STEAM - அதாவது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் மருத்துவம் போன்ற பிரிவுகளில் சேர்ந்து, கல்வி பெற உதவும் நோக்கோடு, கல்வியில் பின்தங்கியுள்ள 10 மாவட்டங்களில் முன்மாதிரிப் பள்ளிகளை இந்த அரசு தொடங்கியுள்ளது. வரும் நிதியாண்டில், **மேலும் 15 மாவட்டங்களில் இத்தகைய முன்மாதிரிப் பள்ளிகள் (Model Schools) தொடங்கப்படும்**. இத்திட்டத்திற்காக 125 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

61) அடுத்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து அரசுப் பள்ளிகளை (ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் உட்பட) நவீனமயமாக்குவதற்கான **'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்'** என்ற மாபெரும் திட்டத்தை அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தில், **அரசுப் பள்ளிகளில், தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 18,000 புதிய வகுப்பறைகள் கட்டப்படும்**. மேலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளும் (smart classrooms), இதரப் பள்ளிகளில் அதிநவீன கணினி ஆய்வகங்களும் உருவாக்கப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளில், **இத்திட்டங்கள் படிப்படியாக 7,000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்**. வரும் நிதியாண்டில் 1,300 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

62) மாநிலத்தில் இயங்கி வரும் பொது நூலகங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்து, மேம்படுத்தத் தேவையான ஆலோசனைகள் வழங்க ஓர் உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. **புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில், 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் உயர்தர வசதிகளுடன்கூடிய மாவட்ட மத்திய நூலகங்கள் அரசால் ஏற்படுத்தப்படும்**.

இந்நூலகக் கட்டடங்களுக்கு தமிழ் அறிஞர்களின் பெயர்கள் சூட்டப்படும்.

63) சமுதாயத்தை அறிவார்ந்த நிலைக்கு உயர்த்துவதில் புத்தக வாசிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல, சென்னை புத்தகக்காட்சி போன்று **தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக்காட்சிகள் நடத்தப்படும்**. இத்துடன் இலக்கியச் செழுமை மிக்க தமிழ்மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் வகையில், ஆண்டுக்கு நான்கு இலக்கியத் திருவிழாக்கள் நடத்தப்படும். **புத்தகக்காட்சிகள் மற்றும் இலக்கியத் திருவிழாக்கள் வரும் ஆண்டில் 5.6 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்**.

64) இம்மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வித் துறைக்கு 36,895.89 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர் கல்வித் துறை**

65) தமிழ்நாட்டில் உள்ள திறன்மிக்க மனிதவளத்தை மேலும் மேம்படுத்தி, ஓர் அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவது இந்த அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். **உலகளாவிய பங்களிப்புடன், "அறிவு சார் நகரம்" (Knowledge City) ஒன்று உருவாக்கப்படும்**. இந்த அறிவு சார்

நகரம், உலகளவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் கிளைகளைக் கொண்டிருக்கும். **இந்நகரம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், திறன் பயிற்சி மையங்கள், அறிவு சார்ந்த தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்**. மேலும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) போன்ற அரசு பொதுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் தங்களின் வளாகங்களில் ஆராய்ச்சிப் பூங்காக்களை நிறுவ ஊக்குவிக்கப்படும்.

66) தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் உயர்ந்துகொண்டே வருகிறது. அதற்கேற்ப, அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகும். **அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, புதிய வகுப்பறைகள், விடுதிகள், ஆய்வகங்கள், திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்கப்படும்**. இதற்காக, இவ்வாண்டு 250 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

67) முன்னுரிமை அடிப்படையில் 7.5 சதவீத ஒதுக்கீட்டில் கல்லூரிகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் பல்வேறு கட்டணங்களுக்காக 204 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

68) இம்மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்கு 5,668.89 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நான் முதல்வன்**

69) ஆண்டுக்கு ஐந்து இலட்சம் இளைஞர்களை, படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்துவதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகள் அடையாளம் காணப்பட்டு, அவை ஊக்குவிக்கப்படும். மேலும், தொழில் நிறுவனங்களின் திறன் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு சிறப்புத் திறன் பயிற்சிகள் வழங்கப்படும். இதன் மூலம், மாணவர்களின் வேலை பெறும் திறன் (employability) பெருகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த, 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

70) உலகமெங்கும் பல நாடுகளில் விஞ்ஞானிகளாக, பேராசிரியர்களாக, தொழில் நிபுணர்களாக தமிழர்கள் தங்களது துறையில் சாதனை புரிகிறார்கள். பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் ஆராய்ச்சித் திறனை உயர்த்துதல், மாணவர்களுக்கு வழிகாட்டுதல், வளர்ந்து வரும் துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல், பாடத்திட்டத்தை மாற்றியமைத்தல் போன்றவற்றை இவர்களுடன் இணைந்து செயல்படுத்த ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

71) இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற **புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்நிறுவனங்களில் இளநிலைப் பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கும்**. 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணவர்கள் இந்த உதவியைப் பெறலாம்.

**இளைஞர் நலன்**

72) ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்குவதில் வெற்றி கண்ட, "ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல்" (Olympic Gold Quest) போலவே, **தமிழ்நாட்டிலிருந்து உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களையும்**

**ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களையும் உருவாக்க, தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப்பதக்கத் தேடல் திட்டத்தைச் செயல்படுத்திட 25 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

73) பல்வேறு விளையாட்டுகளுக்குப் புகழ்பெற்ற வடசென்னையில், இளைஞர்களின் திறனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சிறந்த விளையாட்டு வசதிகள் மற்றும் கட்டமைப்புகளுடன் கூடிய விளையாட்டு வளாகம் ஒன்றை அரசு உருவாக்கும். கைப்பந்து, பூப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கபடி, உள்ளரங்க விளையாட்டுகள் மற்றும் நவீன உடற்பயிற்சிக்கூட வசதிகளுடன், சென்னை இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் செலவில் இவ்வளாகம் அமைக்கப்படும்.

**சதுரங்க ஒலிம்பியாட்**

74) சதுரங்க விளையாட்டிற்கு உலகில் மிகவும் புகழ்பெற்ற போட்டி சதுரங்க ஒலிம்பியாட் (Chess Olympiad) ஆகும். பொதுவாக, இந்த போட்டியை நடத்துவதற்கு நாடுகளுக்கு மத்தியில் கடும் போட்டி நிலவுகிறது. இதுவரை, இந்த போட்டியை நடத்த இந்தியாவிற்கு வாய்ப்பு எட்டவில்லை. இவ்வாண்டு, இந்த அரசின் சீரிய முயற்சிகளின் பயனாக முதன்முறையாக சதுரங்க ஒலிம்பியாட் சென்னையில் நடைபெறும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 150 நாடுகளைச்

சேர்ந்த 2000 முன்னணி சதுரங்க வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள உள்ளனர். தமிழ்நாட்டின் விளையாட்டு துறையில் இது ஒரு திருப்புமுனையாக அமையும். இந்தப் போட்டியை சிறப்பாக நடத்த முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் இந்த அரசு வழங்கும்.

75) இம்மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 293.26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் நல்வாழ்வு**

76) தரமான மருத்துவ வசதிகளை மாவட்ட அளவில் வழங்குவதற்காகவும், முக்கியத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் 19 அரசு மருத்துவமனைகளை புதிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகளாக மேம்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது. **புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்கள் உள்ளிட்ட 19 மாவட்டங்களிலுள்ள அரசு மருத்துவமனைகள் 1,019 கோடி ரூபாய் செலவில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்**.

77) உலகளாவிய நோய்த்தாக்க ஆய்வின்படி, மன அழுத்தம், பதற்றம், மனச்சிதைவு ஆகியவற்றின் தாக்கம்

அதிகமாக உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் மனநல மருத்துவப் பயிற்சி பெற்ற மனித வளத்துடன் மனநோய் சிகிச்சை கட்டமைப்பை வலுப்படுத்துவது இன்றியமையாதது. இத்தகைய உயர்தர மனநலச் சேவைகளை வழங்குவதற்காக, கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநல மருத்துவமனையை (IMH), **தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனம் (TNIMHANS) என்ற உயர்நிலை அமைப்பாக மேம்படுத்திட அரசு திட்டமிட்டுள்ளது**. இதற்கு, முதல் கட்டமாக 40 கோடி ரூபாய் வழங்கப்படும்.

78) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள **அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம்** 1969 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, 290 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது. இந்த மருத்துவமனை தற்போது 500 படுக்கை வசதிகளுடன் 120 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனை, **750 படுக்கை வசதிகளுடைய, தன்னாட்சி அதிகாரம் பெற்ற உயர்தர மருத்துவமனையாக மேலும் தரம் உயர்த்தப்படும்**. இப்பணிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கி மற்றும் தேசிய சுகாதார இயக்க நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

79) தற்போது உக்ரைனில் நடைபெற்று வரும் போரினால் பாதிக்கப்பட்டு, தமது மருத்துவக் கல்வியைத் தொடர இயலாமல் தாயகம் திரும்பியுள்ள நமது மாணவ மாணவியர் அனைவரும் தமது மருத்துவக் கல்வியை தொடருவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களை வலியுறுத்தியுள்ளார்கள். இந்த மாணவர்கள் நமது நாட்டிலோ, பிற வெளிநாடுகளிலோ மருத்துவக் கல்வியை தொடர்வதற்கான வழிமுறைகள் ஒன்றிய அரசால் வகுக்கப்பட்டு வருகின்றன. இந்த வழிமுறைகளின் அடிப்படையில், அவர்களது எதிர்கால மருத்துவக்கல்விக்கான அனைத்து உதவிகளையும் இந்த அரசு வழங்கும்.

80) தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்திற்கு 1,906 கோடி ரூபாயும், அவசர ஊர்தி சேவைகளுக்கு 304 கோடி ரூபாயும், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கு 817 கோடி ரூபாயும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு 1,547 கோடி ரூபாயும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

81) இம்மதிப்பீடுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 17,901.73 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

82) **பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**

என்றார் மகாகவி.

ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் கல்வியை ஊக்குவிக்கவும், திருமண உதவிக்காகவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது. மாறிவரும் காலச் சூழலுக்கு ஏற்ப, பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் உயர் கல்வியை உறுதி செய்ய இத்திட்டத்தை மாற்றியமைப்பது அவசியமாகிறது.

83) தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கை மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் என மாற்றியமைக்கப்படுகிறது**. இதன் மூலம், அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி

முடிக்கும் வரை, **மாதம் 1,000 ரூபாய் அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும்**. இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும், இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம். இத்திட்டத்தின் மூலம், சுமார் ஆறு இலட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளது. இந்தப் புதிய முன்முயற்சிக்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 698 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு வறிய நிலையில் உள்ள விதவையரின் மகள்களின் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்கள் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

84) செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்" அமைக்கப்படும். இம்மையத்தில், குழந்தைகள் மற்றும் மகளிரின் நலன், உரிமைகள், மேம்பாடு, அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக சமூகநலத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

85) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்கு 2,542 கோடி ரூபாயும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு 1,949 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

86) இம்மதிப்பீடுகளில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு 5,922.40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன்**

87) **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரால் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கு (TANSIM) 30 கோடி ரூபாய் நிதியாக வழங்கப்படும். அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் பகுக்கக்கூடிய கொள்முதல்களில், ஐந்து சதவீதம் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில் முனைவோர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

88) விளிம்பு நிலையில் இருக்கும் **இருளர்கள் போன்ற பண்டைய பழங்குடியினருக்கு** (Particularly Vulnerable Tribal Groups) இந்த ஆண்டு 20.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

443 வீடுகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. வரும் நிதியாண்டில் மேலும், **1000 புதிய வீடுகள் பண்டைய பழங்குடியினருக்கு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்**.

89) ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் உயர்கல்வி உதவித்தொகைக்காக 1,963 கோடி ரூபாயும், உணவுக் கட்டணத்திற்கு 512 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

90) இம்மதிப்பீடுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 4,281.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாணவர் விடுதிகள்**

91) அனைத்து அரசு மாணவர் விடுதிகளின் செயல்பாடுகளையும் ஆய்வு செய்து, அதன் கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம், கல்விச் சூழல், உணவுத் தரம், பாதுகாப்பு, கண்காணிப்பு ஆகியவற்றை மறுசீரமைக்கத் தேவையான பரிந்துரைகளை வழங்க, ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

92) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூக, பொருளாதார முன்னேற்றம் அடையும் வண்ணம், தற்போது நடைமுறையில் உள்ள வாழ்வாதாரத் திட்டங்களை ஆய்வு செய்து, மாறி வரும் பொருளாதாரச் சூழலுக்கு ஏற்றவாறு மறுசீரமைக்கப்படும்.

93) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உயர்கல்வி உதவித்தொகைக்காக 322 கோடி ரூபாயும், மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குவதற்காக 162 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினர் நலன்

94) தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் வழிபாட்டுத் தலங்களான தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், தர்காக்களைப் பழுதுபார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இந்த ஆண்டு சென்னையில் உள்ள வெஸ்லி தேவாலயம், புனித தோமையர் மலை தேவாலயம், திருநெல்வேலியில் உள்ள கால்டுவெல் தேவாலயம், நாகர்கோவிலில் உள்ள தூய சேவியர் தேவாலயம், சென்னையில் உள்ள நவாப் வாலாஜா பள்ளிவாசல், ஏர்வாடி தர்கா, நாகூர் தர்கா ஆகிய **தொன்மையான வழிபாட்டுத் தலங்கள்**

**புனரமைக்கப்படும்**. இப்பணிகளுக்கு, வரும் நிதியாண்டில் 12 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.

95) இம்மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 1,230.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

96) சிறப்புத் தேவையுள்ள ஒவ்வொரு குழந்தையும் நன்கு வளர்வதற்கான வாய்ப்புகளை உறுதி செய்வதற்கு, ஆரம்பக் கட்டத்திலேயே குறைபாட்டைக் கண்டறிந்து சிகிச்சை வழங்குவது இன்றியமையாததாகும். தற்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பள்ளிக்கல்வித் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய துறைகள் இப்பணிகளைத் தனித்தனியாகச் செய்கின்றன. இத்துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, **தகவல் பரிமாற்றத்திற்கு வழிவகை செய்து, பல்வேறு வகையான சிகிச்சை மையங்கள் மூலம் சிறப்புத் தேவைகளுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு அனைத்து சேவைகளையும் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்**.

97) தரமான ஆரம்ப நிலை பயிற்சி மற்றும் கல்வியை வழங்குவதற்காக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால்

நடத்தப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி நிறுவனங்களுக்கு அரசு சம்பள மானியம் வழங்கி வருகிறது. இந்நிறுவனங்களில் பணியாற்றும் உடற்பயிற்சி பயிற்றுநர் மற்றும் சிறப்பு கல்வியாளர்களுக்கு வழங்கப்படும் மாத மதிப்பூதியம் 14,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

98) கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்புத் தொகைக்காக 450 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

99) இம்மதிப்பீடுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு 838.01 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித் துறை**

100) பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், 2016-2020 ஆம் ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட 1,77,922 வீடுகளின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்திட, மேற்கூரை அமைப்பதற்காக கூடுதலாக வழங்கப்படும் 70,000 ரூபாய் உட்பட ஆண்டுதோறும் வீடு ஒன்றிற்கு மொத்தம் 1,68,000 ரூபாய் மாநில அரசு வழங்கி வருகிறது. 2021-22 ஆம் ஆண்டில் 2,30,788 புதிய வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 4,848 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

101) கட்டமைப்புப் பற்றாக்குறையை நிறைவு செய்து, கிராமங்களை பன்முக வளர்ச்சியடையச் செய்வது, அனைத்துக் கிராம **அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II** ன் குறிக்கோளாகும். **வரும் ஆண்டில், 1,455 கோடி ரூபாய் செலவில் 2,657 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்**. அரசின் முன்னோடித் திட்டமான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

102) சமத்துவம் தழைக்கும் ஏற்றத்தாழ்வுகளற்ற தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டன. முதற்கட்டமாக, **கடந்த பத்தாண்டுகளாக பராமரிப்பு இன்றி புறக்கணிக்கப்பட்ட 149 சமத்துவபுரங்கள் 190 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்படும்**.

103) பிரதமரின் கிராம சாலைத்திட்டம் III-ன் கீழ், 1,280 கி.மீ. நீளமுள்ள 280 சாலைகளை 791 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 54 பாலங்களை 221 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் அமைப்பதற்கான பணிகள் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

104) மகளிர் சுய உதவிக் குழுக்களை தற்காலத்திய தொழில்நுட்ப பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப, திறன்மிகு சுய உதவிக் குழுக்களாக (Smart SHG) மேம்படுத்த முன்னோடி பயிற்சித் திட்டமாக (pilot training basis) மதுரையில் தொடங்கப்படும். தமது முன்னேற்றத்துடன் தாம் சார்ந்துள்ள சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் அவர்கள் பங்காற்றும் வகையில் சுய உதவிக் குழுக்களை மெருகேற்றிட பயிற்சி வழங்கப்படும்.

105) மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு 2,800 கோடி ரூபாயும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 705 கோடி ரூபாயும், தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்திற்கு 636 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

106) இம்மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 26,647.19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி நிர்வாகம்**

107) திடக்கழிவு மேலாண்மை உட்பட, முழுமையான சுகாதாரத்தை உறுதி செய்வதற்கான, இரண்டாவது தூய்மை இந்தியா இயக்கம், ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் அரசால்

செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மாநிலப் பங்கீடாக 2,169 கோடி ரூபாயுடன் மொத்தமாக 5,465 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. கொடுங்கையூரில் பல ஆண்டுகளாகத் தேங்கியுள்ள குப்பைகளை பிரித்து அகற்றும் பணிகள் 'Bio-mining' முறையில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

108) அம்ருத் 2.0 திட்டத்திற்கான ஒட்டுமொத்த திட்ட மதிப்பு சுமார் 13,000 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய அரசு ஆகியவற்றின் பங்களிப்பின் வாயிலாக இத்திட்டத்தின் மூலம் பல்வேறு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் மேலாண்மைத் திட்டங்களை அரசு செயல்படுத்தும். இம்மதிப்பீடுகளில் அம்ருத் திட்டத்திற்கு 2,130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

109) **புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய ஆறு மாநகராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு, தலா 10 கோடி ரூபாய் என மொத்தம் 60 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக வழங்கப்படும். மேலும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 28 நகராட்சிகளுக்கு தலா 2 கோடி ரூபாய் என மொத்தம் 56 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக வழங்கப்படும்**.

110) 200 ஆண்டுகளுக்கு முன், ஜூன், 1822 இல் ஜான் சல்லீவன் என்ற ஆங்கிலேய அதிகாரியால் முதன்முதலாகக் கண்டறியப்பட்டு கட்டமைக்கப்பட்டதே இன்றைய நீலகிரி மாவட்டத்தின் தலைமையிடமான உதகை நகரமாகும். இதனை நினைவுகூறும் வகையில் சிறப்புத் திட்டங்களும் நிகழ்ச்சிகளும் மேற்கொள்ள 10 கோடி ரூபாய் சிறப்பு நிதி வழங்கப்படுகிறது.

111) நகர்ப்புரப் பகுதிகளைப் பசுமையாக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு 500 பூங்காக்கள் உருவாக்கப்படும்.

112) அண்மையில் நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று, புதிய மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1,000 கோடி ரூபாயும், சிங்காரச் சென்னை 2.0 திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்கு 1,875 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

113) இம்மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 20,400.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல்

114) மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் போதுமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தற்போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 542 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2,208 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் 5.64 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 6 புதிய கூட்டு குடிநீர் திட்டங்கள் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும். குடியிருப்புக்கு குடிநீர் (ஜல்ஜீவன்) திட்டத்திற்காக 3,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி

115) மெட்ரோ இரயில் தடங்கள், புறநகர் இரயில் தடங்கள், தேசிய நெடுஞ்சாலைகள், புறவழிச் சாலைகள், வெளிவட்டச் சாலைகள் போன்ற **போக்குவரத்து வழித்தடங்களை ஒட்டியுள்ள பகுதியில் நகர்ப்புர வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, அப்பகுதிகளில் தற்போதுள்ள தளப்பரப்புக் குறியீட்டை (FSI) உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது**. இதனுடன், இந்தப் பகுதிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளும் முன்னுரிமை அடிப்படையில் ஏற்படுத்தப்படும்.

116) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பழுதடைந்த, பழைய குடியிருப்புப் பகுதிகளின் மறுமேம்பாடு (re-development) மேற்கொள்ளப்படும். இதற்காக, அரசு ஒரு "மறுமேம்பாட்டுக் கொள்கையை" இந்த ஆண்டு வெளியிடும். இதுவரை அறுபது திட்டங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டு, தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் அதிகபட்ச தளப்பரப்பை அடைவதற்கு, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

117) **மீஞ்சூரில் இருந்து வண்டலூர் வரை 62 கிலோமீட்டர் நீளமுள்ள வெளிவட்டச் சாலையின் (ORR) கிழக்குப் பகுதியில் 50 மீட்டர் அகலமுள்ள நிலம், வளர்ச்சிப் பெருவழியாக (Development Corridor) மேம்படுத்தப்படும்**. இந்தப் பெருவழியை அடுத்துள்ள பகுதிகளில், குடியிருப்பு நகரியம், சிப்காட் தொழிற்பூங்காக்கள், பொழுதுபோக்குப் பகுதிகள், சேமிப்புக் கிடங்குகள், தோட்டக்கலைப் பூங்காக்கள், இயற்கை உணவு பதப்படுத்தும் மண்டலம் மற்றும் தயார் நிலையில் உள்ள தொழிற்கூடங்கள் (plug-and-play) ஆகியவற்றை அமைத்திட திட்டமிடுவதற்கான விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தப் பெருவழியில் முழுமையான வளர்ச்சியை அடைய, தளப்பரப்புக் குறியீடும் (FSI) உயர்த்தப்படும்.

118) **திட்ட அனுமதி, கட்டடம் கட்டுதல், மனைகள் ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்கும் நடைமுறையை துரிதப்படுத்துவதற்காக** சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் ஊரமைப்பு இயக்ககம், பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளால் **ஒற்றைச் சாளர முறை இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்**.

119) பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்திற்காக (நகர்ப்புரம்) 3,700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

120) இம்மதிப்பீடுகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறைக்கு 8,737.71 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலைகள்**

121) சென்னையின் வர்த்தக வளர்ச்சிக்கு உயிர்நாடியாக திகழக்கூடிய **மதுரவாயல் – சென்னை துறைமுகம் உயர்மட்டச் சாலை** திட்டத்தை மீட்டெடுத்து, நிறைவேற்றிட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. **இத்திட்டம், 5,770 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20.6 கிலோ மீட்டர் நீளமுள்ள இரட்டை அடுக்கு உயர்மட்டச் சாலையாக அமைக்கப்பட உள்ளது**. இதற்கான விரிவான திட்ட அறிக்கை

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், தமிழ்நாடு அரசு, கடற்படை மற்றும் சென்னை துறைமுகம் ஆகியவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளது.

122) காட்டுப்பாக்கம் சந்திப்பு என்பது சென்னை-சித்தூர்-பெங்களூரு சாலை, மவுண்ட் - பூந்தமல்லி - ஆவடி சாலை மற்றும் பூந்தமல்லி – குன்றத்தூர் - பல்லாவரம் சாலை போன்ற முக்கியச் சாலைகள் கூடும் இடமாகும். இச்சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, 322 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உயர்மட்ட சுற்றமைப்புடன் கூடிய சாலை மேம்பாலம் கட்டப்படும். இதன் முதற்கட்டமாக, விரிவான திட்ட அறிக்கை இவ்வாண்டு தயாரிக்கப்படும்.

123) **கிழக்குக் கடற்கரை சாலையில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட, அக்கரை வரை நான்குவழிச் சாலையை ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்துவது அவசியமாகும்**. திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம் பகுதிகளில் இச்சாலையை அகலப்படுத்துவதற்கு, ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. **நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூரில் உள்ள மீதமுள்ள சாலைப் பகுதி 135 கோடி ரூபாய் செலவில்**

**ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்தப்படும்**. மாமல்லபுரத்திற்கு அப்பால் உள்ள கிழக்குக் கடற்கரை சாலையை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்திடம் ஒப்படைப்பது தொடர்பான சிக்கல் தீர்க்கப்பட்டு, நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

124) பருவமழைக் காலங்களில் தரைப்பாலங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிடுவதால் பல நாட்கள் போக்குவரத்து துண்டிக்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, 2026 ஆம் ஆண்டிற்குள், **வெள்ள காலத்தில் மக்களை பாதிக்கக்கூடிய தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்ற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது**. **இதன் அடிப்படையில், வரும் ஆண்டில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர்மட்டப் பாலங்கள் அமைக்கப்படும்**.

125) சென்னை வெளிவட்ட சுற்றுச்சாலை திட்டத்திற்கு 2,250 கோடி ரூபாயும், சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 1,200 கோடி ரூபாயும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு 628 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

126) இம்மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு 18,218.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

127) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மகளிருக்கு இலவச பேருந்துப் பயணத் திட்டத்தினால் மகளிர் பயணிகளின் பங்கு 40 சதவீதத்தில் இருந்து 61 சதவீதமாக உயர்ந்துள்ளது. இத்திட்டம், பெண்களின் சமூக, பொருளாதார நிலையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில், மகளிருக்கு இலவச பேருந்துப் பயண மானியமாக 1,520 கோடி ரூபாயும், மாணவர்களுக்கான பேருந்துப் பயணக் கட்டணச் சலுகை மானியமாக 928 கோடி ரூபாயும், டீசல் மானியமாக 1,300 கோடி ரூபாயும் வழங்கப்படுகிறது.

128) KfW என்ற ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பேருந்து சேவைகளை காலநிலைக்கு ஏற்ற நவீனமயமாக்கல் திட்டத்தில் **2,213 BS VI புதிய டீசல் பேருந்துகளும், 500 புதிய மின்–பேருந்துகளும் (e–bus) கொள்முதல் செய்யப்படும்**.

129) இம்மதிப்பீடுகளில் போக்குவரத்துத் துறைக்கு 5,375.51 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**எரிசக்தித் துறை**

130) இலவச வேளாண் மின் இணைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து ஒரே ஆண்டில் ஒரு லட்சம் வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்படி, இதுவரை 75,825 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இணைப்புகளும் இந்நிதியாண்டிற்குள் வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மின்னக மையத்தின் மூலமாக, மின் நுகர்வு தொடர்பாக மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக தீர்வுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 6,77,838 புகார்களுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

131) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் பெரும் நிதி இழப்பை எதிர்கொள்வதால் அதன் நிதிநிலை கவலைக்குரியதாக உள்ளது. நடப்பாண்டில் (2021-22) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்பை 100 சதவீதம் அரசே ஏற்க, 13,108 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு நுகர்வோருக்கு வழங்கும் மின்கட்டண

மானியத்தை ஈடுசெய்வதற்காக, கூடுதலாக 9,379 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

132) இம்மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 19,297.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

133) நாளுக்கு நாள் மாறி வரும் தொழில் சூழலுக்குத் தேவைப்படும், திறன் படைத்த மனிதவளத்தை உருவாக்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. **71 அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள், "தொழில் 4.0" (Industry 4.0) தரநிலையை அடைவதற்காகவும், தலைசிறந்த திறன் மையங்களாக மாற்றப்படுவதற்காகவும், 2,877 கோடி ரூபாய் செலவில் முன்னணி தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்**. புதிய தொழில்நுட்பங்களுக்குத் தேவையான பயிற்சிக் கட்டமைப்புகளை உருவாக்கி, திறன் இடைவெளியைக் குறைக்கும் வண்ணம் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும்.

134) தமிழ்நாட்டில் தொழில், பொருளாதார வளர்ச்சியின் காரணமாக, புலம்பெயர் தொழிலாளர்களின் தேவை அதிகரித்து வருகிறது. இத்தொழிலாளர்கள் பற்றி போதிய விபரங்கள் இல்லாமை கோவிட் பெருந்தொற்றின்போது புலப்பட்டது. அரசின்

நலத்திட்டங்களின் பயன்கள் அவர்களைச் சென்றடையவும், அவர்களின் சட்ட உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் **புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நடமாடும் தகவல் மற்றும் உதவி மையங்கள் அறிமுகப்படுத்தப்படும்**. முதற்கட்டமாக, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இந்த நடமாடும் தகவல் மற்றும் உதவி மையங்கள் செயல்படுத்தப்படும்.

135) இம்மதிப்பீடுகளில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு 2,353.93 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

136) மாநிலம் முழுவதும் குறு நிறுவனங்களைக் கொண்ட பல்வேறு குழுமங்கள் (micro clusters) உள்ளன. இத்தகைய **குறு நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில், "குறு நிறுவனக் குழும மேம்பாட்டுத் திட்டம்" ஒன்றை அரசு தொடங்கும்**. 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் பாத்திரங்கள் செய்யும் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நரிக்குறவர் செய்யும் செயற்கை நகைகள் குழுமம், கடலூர் மாவட்டத்தில் முந்திரி பதப்படுத்தும் குழுமம்,

மதுரை மாவட்டத்தில் பொம்மை செய்யும் குழுமம் உள்ளிட்ட இருபது குறு நிறுவனக் குழுமங்கள் இந்த ஆண்டு பயன்பெறும்.

137) தமிழ்நாடு கயிறு உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. கயிறு உற்பத்தித் தொழிலில், விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களின் வருமானத்தைப் பெருக்கிட அதிக வாய்ப்புகள் உள்ளன. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளில், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் Geo Textiles மற்றும் தென்னை நார் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை பிரபலப்படுத்தவும், **மாநிலம் முழுவதும் கயிறுத் தொழில் குழுமங்களை மேம்படுத்தவும் தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் கோயம்புத்தூரில் அமைக்கப்படும்**. இதற்கு, முதற்கட்டமாக ஐந்து கோடி ரூபாய் தொடக்க மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

138) குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக 300 கோடி ரூபாயும், குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதத் திட்டத்திற்காக 100 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

139) இம்மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு 911.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தொழில்கள்

140) 2030 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர் என்ற ஏற்றுமதி இலக்கை தமிழ்நாடு அடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் செப்டம்பர் 2021 இல் தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு, **தமிழ்நாட்டில் ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தேவையான பொதுக் கட்டமைப்புகளை உருவாக்க 100 கோடி ரூபாய் சிறப்பு நிதி உருவாக்கப்படும்**. தொழிற்சாலைகள், தொழில் கூட்டமைப்பினர் பங்களிப்புடன், திறன்சார்ந்த மையங்கள், பரிசோதனை மையங்கள், ஏற்றுமதி கிடங்குகள், உள்நாட்டுக் கொள்கலன் கிடங்குகள் போன்ற கட்டமைப்புகளை அமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

141) தோல் அல்லாத காலணிகள் உற்பத்தியும், தோல் சார்ந்த தொழில்களும் மிகப்பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றன. வேலைவாய்ப்புகள் நிறைந்த இத்துறைகளை மேலும் வளர்க்கும் வண்ணம், **புதிய காலணி மற்றும்**

**தோல் தொழில் மேம்பாட்டுக் கொள்கை ஒன்று வெளியிடப்படும்**.

142) மாநிலம் முழுவதும் பரவலான தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில், கோயம்புத்தூர், பெரம்பலூர், மதுரை, வேலூர், திருவள்ளூர் மாவட்டங்களில் புதிய தொழில் பூங்காக்களை அரசு அமைக்கும். இந்தத் தொழில் பூங்காக்கள் வாயிலாக, 50,000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படும்.

143) பிள்ளைப்பாக்கம் மற்றும் மாநல்லூரில் மின்னணுப் பொருட்கள் தயாரிக்கும் இரண்டு சிறப்பு தொழிற்தொகுப்புகள், ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் நிறுவப்படும். போக்குவரத்தை சீராக்கவும், கனரக வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகளை முறைப்படுத்தவும், செய்யாறு மற்றும் கும்மிடிப்பூண்டியில் சரக்கு வாகன முனையங்கள் அமைக்கப்படும்.

144) இம்மதிப்பீடுகளில் தொழில் துறைக்கு 3,267.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## புத்தொழில் நிறுவனங்கள் (Startups)

145) மாநிலத்தில் புத்தொழில்கள் தழைத்தோங்க ஒரு விரிவான கொள்கையை அரசு வகுத்துள்ளது. **தமிழ்நாட்டைச் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களில் பங்கு முதலீடு**

**செய்வதற்கு 50 கோடி ரூபாயை வளர்ந்து வரும் தொழில்களுக்கான தொடக்க நிதிக்கு (Emerging Sector Seed Fund) அரசு வழங்கும்**. மேலும், இந்தத் தொடக்க நிதியைப் பயன்படுத்தி, பன்மடங்கு தனியார் முதலீடுகள் ஈர்க்கப்படும்.

146) தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) வாயிலாக **ஈரோடு, மதுரை, திருநெல்வேலியில் புதிய மண்டல அளவிலான புத்தொழில் மையங்கள் ஏற்படுத்தப்படும்**. இவை, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் புத்தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும். **சென்னை நந்தம்பாக்கத்தில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன்கூடிய மாநில புத்தொழில் நிறுவன மையம் ஒன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (TIDCO) அமைக்கப்படும்**.

147) **தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் வண்ணம்**, இந்நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் புதுமையான பொருட்களை (innovative manufactured products), **50 இலட்சம் ரூபாய் வரை அரசுத் துறைகளும் நிறுவனங்களும் நேரடியாகக் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படும்**.

## தகவல் தொழில்நுட்பம்

148) செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திர அறிவு (Machine Learning), நம்பிக்கை இணையம் (Block chain) போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தை இந்த அரசு நன்கு அறிந்துள்ளது. இதனை ஊக்குவிப்பதற்காக, **சென்னையில் 54.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT) அரசால் அமைக்கப்படும்.** மாநிலத்தின் பெரும் தொழில்நுட்ப சவால்களுக்குத் தீர்வு காணவும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதற்கான பணிகளை ஒருங்கிணைக்கவும் இந்த மையம் செயல்படும்.

149) இம்மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு 199.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சுற்றுலா

150) வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. உலகின் பழமையான தமிழ்ப் பண்பாடு, தொன்மையான கோவில்கள், கட்டடக் கலை ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகள் துய்க்கும் வண்ணம் சுற்றுலாச் சேவைகள் அறிமுகப்படுத்தப்படும். தனியார் பங்களிப்புடன் முக்கியத் தலங்களான காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்,

இராமநாதபுரம் மாவட்டங்களில் தொகுப்பு சுற்றுலாப் பயணங்கள் செயல்படுத்தப்படும்.

151) சமண, பௌத்த மதங்களைச் சார்ந்த புகழ்பெற்ற தலங்கள் தமிழ்நாட்டில் பரவலாக உள்ளன. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், கரூர், மதுரை போன்ற மாவட்டங்களில் உள்ள இத்தலங்களைச் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்க உலகத் தரத்தில் சுற்றுலா வசதிகள் தனியார் பங்களிப்புடன் ஏற்படுத்தப்படும்.

152) இம்மதிப்பீடுகளில் சுற்றுலா-கலை மற்றும் பண்பாட்டுத் துறைக்கு 246.06 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இந்து சமய அறநிலையத்துறை

153) தமிழர்களின் வரலாறு, பண்பாடு, கட்டடக்கலை ஆகியவற்றின் விழுமியங்களின் சான்றாக, தொன்மையான திருக்கோயில்கள் தமிழகமெங்கும் விரவியுள்ளன. **ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாமல் புதுப்பித்து, புனரமைத்து, பார் போற்றும் வண்ணம் பணிகளை மேற்கொள்ள இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்**. இப்பணிகள் 100 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

154) இம்மதிப்பீடுகளில் இந்து சமய அறநிலையத் துறைக்கு 340.87 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசுப் பணியாளர்கள் நலன்**

155) தமிழ்நாடு அரசின் ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தில், ஓய்வூதியதாரர்களின் மரணத்தின்போது, அவரின் குடும்பத்தினருக்கு 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. கோவிட் பெருந்தொற்றினால், இத்தொகையைப் பெறுவதற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. **ஓய்வூதியதாரர்களின் குடும்பத்தினர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை நேர் செய்ய, ஒரு சிறப்பு ஒதுக்கீடாக 50 கோடி ரூபாயை அரசு வழங்கும்**.

156) கோவிட் நோய்த்தொற்றால் பணியிடை மரணமடைந்த 327 முன்களப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 79.5 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

157) உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை அரசு ஊழியர்களுக்கு வழங்குவதற்காகவும், ஓய்வூதியப் பயன்களை வழங்குவதற்காகவும், வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலாக ஏறத்தாழ 19,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**நிர்வாகச் சீர்திருத்தங்கள்**

158) இந்த நிதி நிலை அறிக்கையில் எய்தப்பட்டுள்ள நிதிக் குறியீடுகள், அரசின் சிறப்பான நிதி மேலாண்மை மற்றும் கடைபிடிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் வாயிலாகப் பெறப்பட்டுள்ளன. ஆகவே, சில முக்கிய சீர்திருத்தங்கள் குறித்து எடுத்துரைக்க விழைகிறேன்.

159) மனிதவளமே ஒரு நிறுவனத்தின் மிக முக்கியமான சொத்தாகும். காலிப் பணியிடங்கள் அதிக அளவில் உள்ள அதே வேளையில், சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் மிகவும் அதிகமாக உள்ள ஓர் இக்கட்டான சூழலில் நாம் உள்ளோம். நடைமுறையில் உள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிக்கான முறைகளை சீரமைப்பது மிகவும் அவசியமானது. கோவிட் பெருந்தொற்று இந்தத் தேவைக்கு மேலும் வலு சேர்த்துள்ளது. பணியமர்த்தல் மற்றும் பயிற்சிக்கான விதிகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ளும் பணியினை இவ்வாண்டு தொடங்கியுள்ளோம். **மனிதவளம் தொடர்பான சீர்திருத்தங்கள் மேற்கொள்வதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை ஆறுமாத கால அளவிற்குள் முன்மொழிவதற்காக 'மனிதவள சீர்திருத்தக் குழு' ஒன்று அமைக்கப்படும்**.

160) அரசு சொத்துக்களை முறையாக கணக்கிட, அனைத்து அரசுத் துறைகளில் இருக்கும் அசையும், அசையா சொத்துக்களின் விவரங்களை சேகரித்து, அவற்றின் பயன்பாட்டை கண்காணிக்க ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்துடன் (IFHRMS) இணைத்து ஒரு சொத்து மேலாண்மை மென்பொருள் (Asset Management Software) வரும் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும்.

161) அரசின் உட்தணிக்கை அமைப்பு முறையில் தேவையான அடிப்படைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று நான் கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டிருந்தேன். இதற்காக, தணிக்கைத் துறைகளை ஆய்வு செய்து, சீர்திருத்தங்களை மேற்கொள்ளத் தேவையான பரிந்துரைகளை வழங்கிட, ஓர் ஓய்வு பெற்ற இந்திய தணிக்கை மற்றும் கணக்குப் பணி அலுவலர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, நான்கு மாதங்களில் தனது அறிக்கையை வழங்கும்.

162) வெளிப்படைத் தன்மையுடன் கூடிய ஒளிவுமறைவற்ற நிருவாகத்தை வழங்குவது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். இதனை உறுதிசெய்ய, 01-04-2023 முதல் அனைத்து அரசு மற்றும் அரசுப் பொது நிறுவனங்களின் கொள்முதல்களுக்கும் 'மின்னணு – கொள்முதல் முறை'

(e-Procurement) கட்டாயமாக்கப்படும். இதற்காக, தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவுமறைவற்ற தன்மைச் சட்ட விதிகளில் தேவையான திருத்தங்களை அரசு கொண்டு வரும்.

163) இந்த ஆண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையை வலுப்படுத்த அலுவலகம், வாகனங்கள் போன்ற கட்டமைப்புகள், கூடுதல் பணியாளர்கள், வல்லுநர்களைப் பணியமர்த்துதல் போன்றவற்றிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையை வலுப்படுத்தும் பணிகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். நேர்மையான நிருவாகத்தை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## பகுதி–ஆ

## மாநில அரசின் நிதிநிலை

164) நான் இதுவரை இந்த அரசின் புதுமுயற்சிகளையும் திட்டங்களையும் எடுத்துரைத்துள்ளேன். தற்போது ஒட்டுமொத்த நிதிநிலைமையை விளக்க விழைகிறேன்.

165) பெருந்தொற்றின் மூன்றாம் அலையாலும் வரலாறு காணாத வெள்ளத்தினாலும் நிதி நெருக்கடியைச் சந்தித்த போதிலும், ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வகையில் அளிக்கப்பட்ட பல முக்கிய வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றி உள்ளது. இதனால், மானியச் செலவினங்கள் உயர்ந்துள்ளன. இருப்பினும், சிறந்த நிதி நிருவாகத்தின் வாயிலாக இதர செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இதன் பயனாக, 2021-22 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளான 2,61,188.57 கோடி ரூபாயோடு ஒப்பிடும்போது, திருத்த மதிப்பீடுகளில் 2,59,150.97 கோடி ரூபாய் என மொத்த வருவாய் செலவினங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

166) பெருந்தொற்றின் பாதிப்பாலும், வரலாறு காணாத வெள்ளத்தால் ஏற்பட்ட இடையூறுகளாலும் மாநிலத்தின் சொந்த வரிவருவாய் பெரிதும் பாதிக்கப்பட்டது. எனவே, வணிக வரிகள், மாநில ஆயத்தீர்வை, வாகன வரி ஆகியவை வரவு செலவுத் திட்ட இலக்குகளைக் காட்டிலும் திருத்த மதிப்பீடுகளில் குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில், இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடான 1,26,644.15 கோடி ரூபாயை ஒப்பிடும்போது, திருத்த மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 1,21,857.55 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

167) ஒன்றிய அரசின் வரி வசூல் உயர்ந்துள்ளதாலும், மாநில அரசிற்கு வழங்கப்பட வேண்டிய கடந்த ஆண்டுகளின் **நிலுவைத் தொகையை வழங்கியதாலும்**, மத்திய வரிகளின் பங்கீடு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான 27,148.31 கோடி ரூபாயை ஒப்பிடும்போது, திருத்த மதிப்பீடுகளில் 33,580.22 கோடி ரூபாய் மத்திய வரிகளின் பங்கீடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

168) ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள், வரவு-செலவு மதிப்பீடான 34,564.42 கோடி ரூபாயோடு ஒப்பிடும்போது திருத்த மதிப்பீடுகளில் 36,609.47 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளன. **கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை இந்த ஆண்டு வரப்பெற்றதால், இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது**.

169) தற்போதைய பொருளாதாரக் சூழலால், மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் வசூலில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான 14,139.01 கோடி ரூபாயோடு ஒப்பிடும்போது, திருத்த மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 11,830.93 கோடி ரூபாயாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

170) எனவே, மொத்த வருவாய் வரவினங்களின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான 2,02,495.89 கோடி ரூபாயுடன் ஒப்பிடும் போது, திருத்த மதிப்பீடுகளில் 2,03,878.17 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

171) **இந்த அரசின் சிறப்பான நிதி நிருவாகத்தால், வரவு–செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்ட 58,692.68 கோடி ரூபாய்க்கு மாறாக, திருத்த மதிப்பீடுகளில் வருவாய் பற்றாக்குறை 55,272.79 கோடி ரூபாயாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது**.

172) வரலாறு காணாத மழை வெள்ளத்தாலும், பெருந்தொற்றின் மூன்றாம் அலையைக் (Omicron) கட்டுக்குள் கொண்டுவர அமல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளாலும் மூலதனப் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. இதனால், வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 42,180.97 கோடி ரூபாயாக உள்ள மூலதனச் செலவினம் திருத்த மதிப்பீடுகளில் 37,936.23 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

173) 2021-22ஆம் ஆண்டில், மாநிலங்களுக்கு, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 4.5 சதவீதம் வரை நிதிப் பற்றாக்குறையை அனுமதித்து பதினைந்தாவது

மத்திய நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், **மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 4.33 சதவீதம் என முன்னர் மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் 3.80 சதவீதமாகக் குறைந்துள்ளது**.

174) 2022-23ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, கூடுதல் வருவாயை ஈட்டிட அரசு எடுத்து வரும் முயற்சிகள், மேம்பட்ட வரி வசூல் ஆகியவற்றை கருத்தில்கொண்டு, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் இனங்கள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன.

- வணிக வரிகள் : 1,06,765.22 கோடி ரூபாய்
- மாநில ஆயத்தீர்வைகள் : 10,589.12 கோடி ரூபாய்
- முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் : 16,322.73 கோடி ரூபாய்
- மோட்டார் வாகனங்கள் மீதான வரி : 7,149.25 கோடி ரூபாய்

எனவே, வரவு செலவுத் திட்டத்தில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 1,42,799.93 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 15,537.24 கோடி ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது.

175) மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கீடு 33,311.14 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில அரசிற்கு ஏற்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கான நிலுவைத்தொகை வரும் நிதியாண்டில் வழங்கப்படுவதை கருத்தில்கொண்டு 39,758.97 கோடி ரூபாய் உதவி மானியமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒட்டுமொத்த வருவாய் வரவினங்கள் 2,31,407.28 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

176) வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் செலவினங்கள் 2,84,188.45 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளன. அகவிலைப்படி உயர்வின் காரணத்தால் உயர்ந்துள்ள செலவினங்கள், ஓய்வுபெறும் வயதை உயர்த்தியதால் ஏற்பட்ட ஓய்வூதியச் செலவினங்கள் போன்ற காரணிகள் இதில் அடங்கும். வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள திட்டங்களுக்காக போதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

177) வருவாய் வசூலின் திறனை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். அதன்படி, வருவாய் பற்றாக்குறை 52,781.17 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

178) அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த மூலதனச் செலவினங்கள் 43,832.54 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இது 2021-22 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது 23.28 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது.

179) வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், நிதிப் பற்றாக்குறை 90,113.71 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதிப் பற்றாக்குறையானது சரக்கு மற்றும் சேவை வரியில் இழப்பீட்டுத் தொகைக்குப் பதிலாக கடனாகப் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படும் 6,500 கோடி ரூபாயை கருத்திற்கொண்டு, கணக்கிடப்பட்டுள்ளது. ஏனெனில் இந்தக் கடன் மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியத்திலிருந்து (Consolidated Fund) அல்லாமல் ஒன்றிய அரசால் பராமரிக்கப்படும் இழப்பீட்டு மேல்வரி நிதியத்திலிருந்து (GST Compensation Cess) திரும்பச் செலுத்தப்படுவதாகும்.

180) 2022-23 ஆம் ஆண்டில், நிகரக் கடன் 90,116.52 கோடி ரூபாயாக கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே, 31.03.2023 அன்று நிலுவைக் கடன் தொகை 6,53,348.73 கோடி ரூபாயாகவும், கடன் – மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 26.29 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது, 15வது மத்திய நிதிக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பிற்குள் அடங்கும்.

181) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு மாபெரும் மாற்றத்தின் தொடக்கமாக அமையும் என்பதை நான் நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் நிதிநிலை, 2014 ஆம் ஆண்டில் தொடங்கி, கடந்த ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து சரிவை சந்தித்துள்ளது. தொடர்ந்து உயர்ந்து வந்துள்ள வருவாய் பற்றாக்குறை, வருவாய் வரவினங்களில் வட்டிச் செலவினங்களின் விகிதம் ஆகியவை இதை தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்துகின்றன. ஏழு ஆண்டு, தொடர் சரிவிற்கு பின்னர், இந்த இக்கட்டான ஆண்டிலும் வருவாய்ப் பற்றாக்குறை குறைய உள்ளது என்பது இந்த அரசின் சிறந்த நிதி நிருவாகத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

182) இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம், 2003 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் நிபந்தனைகளை நாம் வெகு விரைவில் நிறைவேற்றுவோம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தை இவ்வுரையின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாகக் கருதுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

183) இத்தகைய திறன்மிக்க நிதி நிருவாகம் உலக நிதிச் சந்தைகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் மத்தியில் தமிழ்நாட்டின் நற்பெயரை நிலைநாட்டும். முதலீடுகளை ஈர்க்க சாதகமான இச்சூழலில், முதலீடுகளுக்கு மிக உகந்த மாநிலம் தமிழ்நாடு என்ற நிலைக்கு இது மேலும் வலு சேர்க்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலகட்டத்திலேயே நடைபெற்ற நிகழ்வுகளான, சதுரங்க ஒலிம்பியாட் (Chess Olympiad) போட்டிக்கு சென்னையை மையமாக தேர்வு செய்தது, உலகத்தரம் வாய்ந்த அறைகலன் பூங்கா தூத்துக்குடியில் அமைத்தது, பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் மூலம் பெரும் முதலீடுகளை ஈர்த்ததது ஆகியவை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

184) மகளிரின் முன்னேற்றமே மாநிலத்தின் முன்னேற்றம் என்ற கொள்கையின் அடிப்படையில், அவர்களின் நலனுக்காக தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளான ஆவின் பால் விலைக்குறைப்பு, சுய உதவிக் குழுக்களின் கடன் தள்ளுபடி, அரசுப் பேருந்துகளில் இலவச பயணம் போன்ற பல வாக்குறுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளார்கள். அடுத்த முக்கிய வாக்குறுதியான மகளிருக்கான உரிமைத்தொகை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கப்பட

வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்கள். சென்ற ஆட்சியினர் விட்டுச் சென்ற நிதி நெருக்கடிச் சூழல் காரணமாக, இந்த வாக்குறுதியை இந்த அரசின் முதல் ஆண்டில் செயல்படுத்துவது கடினமாக இருந்து வருகிறது. இருப்பினும், இத்திட்டத்தின் கீழ் பயனடையத் தகுதியுள்ள பயனாளிகளை பல்வேறு தரவுகளின் அடிப்படையில் கண்டறிந்து, பயன்கள் அவர்களை சரியாகச் சென்றடையும் வகையில் திட்டத்தை வடிவமைப்பதற்கான பணிகள் முழு முனைப்புடன் நடைபெற்று வருகின்றன என்பதை இந்தப் பேரவைக்கு தெரிவிக்க விரும்புகின்றேன். இதன் அடிப்படையில், இந்த அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளின் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் ஏற்படும் போது இத்திட்டம் செயல்படுத்தப்படும் என உறுதியளிக்கிறேன்.

185) உலகப்புகழ் பெற்ற நிபுணர்களைக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சரின் பொருளாதார ஆலோசனைக் குழு, தமிழ்நாட்டின் நிதிநிலையை சீராக்குவதற்கு, இந்த அரசிற்கு தக்க ஆலோசனைகளை தொடர்ந்து வழங்கி வருகின்றது. இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதிலும், அவர்கள் நேரம் ஒதுக்கி ஆலோசனைகள் வழங்கியதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆலோசனைகளை மனத்தில் கொண்டு தமிழ்நாட்டின் நிதிநிலையை மேலும் மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள உள்ளது.

186) இந்த வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அயராது உழைத்த நிதித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்களுக்கும் நிதித்துறையின் பிற அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

187) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சமூகத்தில் அனைவருக்கும் பயனளிக்கும் வளர்ச்சியை அடைந்து, சமூகநீதியை நிலைநாட்டி, அனைத்து ஆசிய நாடுகளுக்கும் முன்மாதிரியாகத் தமிழ்நாடு திகழ்வதை உறுதிசெய்ய முனைகிறோம். இந்த வரவு-செலவுத் திட்டத்தை வடிவமைக்க தொடர்ந்து அறிவுரைகள் வழங்கி, முழு ஆதரவு அளித்தவர் அவர்.

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.**

**(குறள்–382)**

மனவுறுதி, கொடை, அறிவு, ஊக்கம் எனப்படும் நான்கு பண்புகளும் அபரிமிதமாக நிறைந்திருப்பது தலைவருக்கு இயல்பாகும்.

இந்தக் குறளுக்கு இலக்கணமாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

188) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்
துறை அமைச்சர்

**சென்னை**
2022 ஆம் ஆண்டு
**மார்ச் மாதம் 18 ஆம் நாள்**
**பிலவ – பங்குனித் திங்கள் 4 ஆம் நாள்**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)-இன்படி, வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். மேலும், இச்சட்டத்தின், 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (2)-இன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு விகிதம் போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கிணங்கி, 2021-22 ஆம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

### நோக்கங்கள்

மாநிலத்தின் சமச்சீரான வளர்ச்சி எனும் ஒட்டுமொத்த நோக்கத்தை அடையும் வகையில், அனைத்து தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழைகள், நலிவடைந்த பிரிவினர் ஆகியோரும் மாநில வளர்ச்சியில் பயன் பெறுவதற்கான உரிய வாய்ப்புகளை ஏற்படுத்திட, வேளாண்மை, தொழில் துறை மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீட்டுக்கு தேவையான அடிப்படை நிதி ஆதாரத்தை உருவாக்கி, உயர் பொருளாதார வளர்ச்சியை அடையுமாறு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு பணிகளுக்கான நலத் திட்டங்களுக்கு இந்த அரசு அதிக அளவில் செலவிட்டு வருவதுடன், சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசனம் மற்றும் மின் திட்டங்கள் போன்ற மூலதனச் செலவினங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, கீழ்கண்ட நிதி விதிமுறைகளைப் பின்பற்றி முற்போக்கான நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் தாங்கும் தன்மைகள் போன்ற இலக்குகளை அடைவதற்கான வரையறைகளை வகுத்துள்ளது.

- நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 2022-23 ஆம் நிதியாண்டில் 3.5 சதவீதத்திற்குள்ளும் 2023-24 ஆம் நிதியாண்டு முதல் 3 சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

- 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டுவரை மின்துறை சீர்திருத்தங்களை நிறைவேற்றும்பட்சத்தில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 0.5 சதவீதம் கூடுதல் கடன் தொகை.

- 15வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, நிலுவைக் கடன் தொகை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 2022-23 ஆம் நிதியாண்டில் 29.3 சதவீதத்திற்குள்ளும், 2023-24 ஆம் நிதியாண்டில் 29.1 சதவீதத்திற்குள்ளும் 2024-25 ஆம் நிதியாண்டில் 28.9 சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

- மேலும், வருவாய்ப் பற்றாக்குறையை படிப்படியாக குறைப்பதற்கான நிதி வழிவகைகளும் வகுக்கப்பட்டு வருவதால் பலன்தரும் சொத்துகள் உருவாக்கத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கும்.

**இதன் நோக்கங்களை அடைவதற்கான வழிமுறைகள்.**

- ❖ நிதி வளங்களை முன்னுரிமைப்படுத்துவதுடன், அதனைப் பெருக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல்.

- ❖ செலவினங்களை திறமையாக மேற்கொள்வதுடன், எதிர்பாரா செலவினங்களையும் கணக்கில் கொண்டும், வளர்ச்சியை உருவாக்கும் செலவினங்களில் சமரசம் செய்யாமலும், அதேசமயம் பொறுப்பேற்ற செலவினங்களுக்குமான நிதித் தேவைகளை எதிர்கொள்ளுதல்.

- ❖ கடன் தாங்குதன்மை வரையறைக்குட்பட்டு வரவுகளுக்கும் செலவுகளுக்கும் இடையில் சமநிலை இருக்குமாறு பராமரித்தல்.

**பொருளாதார நிலை**

கோவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் 2021-22 ஆம் ஆண்டில், இந்திய பொருளாதாரம் நிலையான முன்னேற்றப் பாதையில் 8.95 சதவீத வளர்ச்சியை எதிர் நோக்கியுள்ளது. இருப்பினும், இனி வரும் ஆண்டுகளில், இந்த வளர்ச்சி தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலையான விலையில்

மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீடு 2021-22 ஆம் ஆண்டிற்கு 7.85 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது கோவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் பொருளாதாரம் மீண்டு வருவதைக் காட்டுகிறது. இது முதலீடுகளை ஈர்த்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் நீடித்த கொள்கை முடிவுகளை செயற்படுத்துதல் போன்ற அரசின் முதன்மையான செயல்பாடுகளால் இது நிறைவேற்றப்பட்டுள்ளது. நடப்பாண்டு கணிப்புகளைக் காட்டிலும் எதிர் வரும் ஆண்டுகளில் வலுவான வளர்ச்சியை அடைவோம் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் வளர்ச்சியானது, 2022-23 ஆம் ஆண்டில் 14.0 சதவீதமாகவும் 2023-24 ஆம் ஆண்டில் 14.0 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## I. வருவாய்க் கணக்கு வரவுகள்

மத்திய அரசின் நிதி உதவி உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2021-22 ஆம் ஆண்டின் திருத்த வரவு செலவு மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட வரவினம் 2,03,878.17 கோடியைக் காட்டிலும் 2022-23 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,31,407.28 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் 2023-24 ஆம் ஆண்டில் 2,79,059.26 கோடி ரூபாயகவும் 2024-25 ஆம் ஆண்டில் 3,19,298.09 கோடி ரூபாயகவும் இருக்கும்

என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளுக்கு 20.59 சதவீதம் மற்றும் 14.42 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது. இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

## 1. மாநில அரசின் சொந்த வரி வருவாய்

மாநில அரசின் சொந்த வரி வருவாய், 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 1,21,857.55 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தது. 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 1,42,799.93 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2023-24 ஆம் ஆண்டில் 1,78,499.91 கோடி ரூபாயாகவும், 2024-25 ஆம் ஆண்டில் 2,05,274.89 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகள் மற்றும் அதன் தொடர்புடைய அனுமானங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:-

- ❖ பொருட்கள் மற்றும் சேவைகள் வரியைப் பொறுத்தமட்டில், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறை 30.6.2022 ஆம் நாளுடன் முடிவுக்கு வருகிறது.

இதனால் மாநிலம் 20,000 கோடி ரூபாய் அளவிற்கு சாத்தியமான வருவாய் பற்றாக்குறையை சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோவிட் பெருந்தொற்றிற்குப் பின்னர் மாநிலத்தின் நிதிகள் தற்போது மீளத் தொடங்கியுள்ளது. இழப்பீட்டை அளிக்கும் செயல்பாடு நீட்டிக்கப்படவில்லையெனில், மாநிலத்தின் நிதிகளில் குறிப்பிடத்தக்க அளவிற்கு சுமை ஏற்படும். ஒன்றிய அரசு, சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான நிலுவைகளை உரிய நேரத்தில் வழங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் 50,397.82 கோடி ரூபாயாக மதிப்பிடப்படுகிறது. பெட்ரோலியம் பொருட்களிலிருந்து பெறப்படும் விற்பனை வரி வரவினங்கள், அடுத்த இரண்டு ஆண்டுகளில், குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

❖ 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடான 91,840.45 கோடி ரூபாய்க்கு மாறாக, 2022-23 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வணிக வரிகளின் வருவாய் 1,06,765.22 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வணிக வரியின் வளர்ச்சி விகிதம் தற்போதைய போக்கின் அடிப்படையில்

2023-24 ஆண்டில் 25.0 சதவீதமாகவும் 2024-25-ஆம் ஆண்டில் 15.0 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடான 8,167.28 கோடி ரூபாய்க்கு மாறாக, 2022-23 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில ஆயத்தீர்வைகளின் வருவாய் 10,589.12 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய வரி வசூல் போக்கின் அடிப்படையில், மாநில ஆயத்தீர்வைகளில் 2023-24 ஆம் ஆண்டில் 25.0 சதவீதமும் மற்றும் 2024-25 ஆம் ஆண்டில் 15.0 சதவீதமும் கூடுதல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

- 2021-22 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 14,325.19 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வரவுகள், 2022-23 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 16,322.73 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக வீட்டு மனை விற்பனை துறையில் அதிகரித்துள்ள தேவையின்

அடிப்படையில் 2023-24 ஆண்டில் 25.0 சதவீத வளர்ச்சி இருக்கும் எனவும் 2024-25-ஆம் ஆண்டில் 15.0 சதவீத வளர்ச்சி இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

- 2021-22 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 5,635.03 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த மோட்டார் வாகன வரிவருவாயானது 2022-23 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7,149.25 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வாகனங்களின் பதிவின் மீது மோட்டார் வாகன வரி முக்கியமாக விதிக்கப்படுவதால், வரும் ஆண்டுகளில் மேம்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப வரி வசூலிப்புகள் அமையும். 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளில் முறையே 25.0 சதவீத மற்றும் 15.0 சதவீத வளர்ச்சி வீதம் எதிர்பார்க்கப்படுகிறது.

## 2. வரி அல்லாத வருவாய்

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 15,537.24 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது இது 31.33 சதவீத வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. வருவாய் இனங்களை பெருக்க

எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கையினாலும், வரியல்லாத வருவாய் வசூலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாலும், 2023-24 ஆம் ஆண்டில் 15.0 சதவீதமும் மற்றும் 2024-25 ஆம் ஆண்டில் 7.0 சதவீதமுமாக வளர்ச்சி வீதத்தில் வரியல்லாத வருவாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 3. மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு

2021-22 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், 33,580.22 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த மத்திய வரிகளில் மாநில அரசுக்கான பங்கு 2022-23ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 33,311.14 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2022-23ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் வரவு செலவுத் திட்டத்திலுள்ள மதிப்பீடுகளின் அடிப்படையில் இது மதிப்பிடப்பட்டுள்ளது. 15-வது நிதிக்குழு, தனது பரிந்துரையில் மத்திய வரிகளில் மாநில அரசிற்கான நிதிப்பகிர்வை 42 சதவீதத்தில் இருந்து 41 சதவீதமாக குறைத்துள்ள போதிலும், மாநிலங்களுக்கிடையேயான இடைப்பட்ட நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கை 4.023 சதவீதத்தில் இருந்து 2020-21 ஆம் ஆண்டில் 4.189 சதவீதமாகவும் 2021-22 ஆம் ஆண்டு முதல் 4.079 சதவீதமாகவும் உயர்த்தியுள்ளது. வரும் காலங்களில் இந்தியப் பொருளாதாரத்தின் உண்மையான வளர்ச்சியில் நேர்மறை மாற்றம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, 2022-23 மற்றும்

2023-24 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி வீதங்கள் முறையே 12.79 மற்றும் 10.20 சதவீதமாக இருக்குமென கருதி, மத்திய அரசின் வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு 37,591.11 கோடி ரூபாயாகவும், 2024-25 ஆம் ஆண்டிற்கு 41,404.95 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 4. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்

2022-23 ஆம் ஆண்டின் மத்திய வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் தற்போதைய போக்குகளின் அடிப்படையில் 2022-23 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியம் 39,758.97 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கான நிலுவைத் தொகைகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் விடுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளில் முறையே 13.48 மற்றும் 18.57 சதவீத வளர்ச்சி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றிய அரசால் நிதியளிக்கப்பட்டு தற்போது செயல்பாட்டிலுள்ள திட்டங்களுக்காக பெறப்படவுள்ள மானியங்கள் மற்றும் ஒன்றிய நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் போன்ற மாநிலங்களுக்கான பண பரிவர்த்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

## II. வருவாய் கணக்கில் செலவுகள்

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவினங்கள் 2,84,188.45 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2021-22 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 9.66 சதவீதம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமான வளர்ச்சியை அடைந்துள்ளது. வருவாய் செலவினம் 2023-24 ஆம் ஆண்டில் 3,05,372.41 கோடி ரூபாயாகவும், 2024-25 ஆம் ஆண்டில் 3,32,881.03 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

- ❖ பொறுப்பேற்ற ஊதியச் செலவினங்களுக்காக 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 71,566.81 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2021-22 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 13.83 சதவீதம் அதிகரித்துள்ளது. ஊதியச் செலவினங்கள், 2023-24 ஆம் ஆண்டிற்கு 78,064.83 கோடி ரூபாயாகவும், 2024-25 ஆம் ஆண்டிற்கு 85,871.32 கோடி ரூபாயாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023-24 மற்றும் 2024-25 ஆம்

ஆண்டுக்கான மதிப்பீடுகள் முந்தைய நிலைகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம் அல்லாத, செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான செலவினம் 14,797.86 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினம், 2023-24 ஆம் ஆண்டில் 14,818.97 கோடி ரூபாயாகவும், 2024-25 ஆம் ஆண்டிற்கு 17,041.81 கோடி ரூபாயாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- பொறுப்பேற்ற செலவுகளான, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான மதிப்பீடு 2022-23 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 36,035.83 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பணி ஓய்வுக்கால போக்குகளைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களின் கீழ்வரும் செலவினங்கன் வளர்ச்சி வீதம் 2023-24 ஆம் ஆண்டுகளில் 8.90 சதவீதமும் 2024-25 ஆம் ஆண்டுகளில் 8.0 சதவீதமும் மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மானியங்கள் மற்றும் நிதி பரிமாற்றங்களுக்கான செலவினம் 1,13,643.10 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2021-22 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 3.01 சதவீத எதிர்மறை வளர்ச்சியைக் குறிக்கிறது. மக்களுக்கு வழங்கப்பட்ட மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு, கோவிட் நிவாரணத்திற்கான பண உதவி, மகளிர்களுக்கு பேருந்துகளில் இலவச பயண அட்டை வழங்கியதால் ஏற்ப்பட்ட இழப்புகளை ஈடுசெய்தல் மற்றும் ஏனைய நலத்திட்டங்களுக்காக 2021-22 ஆம் ஆண்டின்போது குறிப்பிடத்தக்க அளவிலான தொகை ஒப்பளிக்கப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் 100 சதவீத இழப்பையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும், நடைமுறைப்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்களுக்காக வரப்பெறவுள்ள தொகைகளின் அடிப்படையில், 2023-24 ஆம் ஆண்டில் 1,16,749.40 கோடி ரூபாயாகவும் 2024-25 ஆம் ஆண்டில் 1,23,754.36 கோடி ரூபாயாகவும் மானியங்கள் மற்றும் நிதி பரிமாற்றங்களுக்கான செலவினம் மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுத்துறை

நிறுவனங்களுடன் குறிப்பாக மின்சாரம் மற்றும் போக்குவரத்து துறைகளுடன் தொடர்புடைய செலவினங்களும் நடைமுறையிலுள்ள திட்ட செலவினங்களுள் அடங்கும். இதுபோன்ற எதிர்பாரா செலவினங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத் தயாரிப்பு மற்றும் மதிப்பீடு கணிப்புகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

## III. மூலதனக் கணக்கு

2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 37,936.23 கோடி ரூபாயைக் காட்டிலும் 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 43,043.38 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2021-22 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் 13.46 சதவீதம் அதிகமாக உள்ளது. இது 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளில் முறையே 45.58 மற்றும் 25.28 சதவீதமாக மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனச் செலவினம் மற்றும் நிகரக் கடன்களும் முன்பணங்களும் உள்ளிட்ட மூலதனக் கணக்கிற்கான செலவினம் 2023-24 ஆம் ஆண்டு 63,570.88 கோடி ரூபாயாகவும் 2024-25 ஆம் ஆண்டு 80,530.49 கோடி ரூபாயாகவும் இருக்கும் என

எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தின் நிதி ஒழுக்கத்தை பராமரிக்கும் அதே வேலையில் வளர்ச்சிக்கான செலவினங்களை தொடர்ந்து அதிகரிப்பதில் இந்த அரசு கொண்டுள்ள உறுதி இதன் மூலம் தெரியவருகிறது.

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

2022-23 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 52,781.17 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2021-22 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை தொகையான 55,272.79 கோடி ரூபாயைக் காட்டிலும் குறைவானதாகும். வருவாய்ப் பற்றாக்குறையை முறையாக குறைப்பதன் மூலம் வருவாய்ப் பற்றாக்குறை இல்லாத நிலையை அடைவதற்கும், தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி, நிதிநிலை மேம்பாடு மற்றும் கடன் தாங்குதன்மையை உறுதி செய்யும் வகையிலும் இடைக்கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே சமநிலையைப் பேணுவதன் மூலம் இந்த நிலையை அடைய எண்ணப்பட்டுள்ளது. இதற்காக வருவாய் ஆதாரங்களை மேம்படுத்த தேவையான வழிமுறைகளை ஆராய முன்னுரிமை வழங்கப்படும். மேலும் வளர்ச்சிக்கான செலவினங்களுக்கு

அதிகமாக ஒதுக்கீடு செய்வது மற்றும் வருவாய் செலவினங்களை சரியான முறையில் பயன்படுத்தும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு செலவினங்களுக்குரிய தரத்தை மேம்படுத்த எண்ணப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை 2022-23 ஆம் ஆண்டில் 26,313.15 கோடி ரூபாயாகவும், 2023-24 ஆம் ஆண்டில் 13,582.94 கோடி ரூபாயாக மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மூலதனச் செலவிற்கு அதிக இடம் தரும் வகையில் உள்ளது.

15வது நிதிக்குழு, நிதிப்பற்றாக்குறைக்கும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டிற்கும் உள்ள விகிதத்தை 2023-24 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாகவும் 2024-25 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாகவும் பராமரிப்பதற்கு மாநில அரசுகளுக்கு அனுமதி அளித்துள்ளது. மேலும், மின்துறை சீர்திருத்தங்களை நிறைவேற்றும்பொருட்டு 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 0.5 சதவீதம் கூடுதலாக பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. 2022-23 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறை விகிதம் 3.63 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2023-24 ஆம் ஆண்டில் 3.17 சதவீதம் மற்றும் 2024-25 ஆம்

ஆண்டில் 2.91 சதவீதமாக இருக்கும். இது 15வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது.

## V. கடன்கள்

மத்திய அரசு நிர்ணயிக்கும் ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் வரவுகள் மற்றும் திரும்பச் செலுத்துதல் மதிப்பிடப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் மாநில அரசு 90,116.52 கோடி ரூபாய் அளவிற்கு நிகரக் கடன் பெற திட்டமிட்டுள்ளது. இதில் சரக்குகள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு ஈடாக மத்திய அரசால் வழங்கப்பெறுமென எதிர்பார்க்கப்படும் 6,500.00 கோடி ரூபாய் அடங்காது. 2023 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளது வரையிலான நிலுவைக் கடன், மத்திய அரசிடமிருந்து சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகைக்கு மாறாக கடனாக பெறப்பட்ட தொகை நீங்கலாக 6,53,348.73 கோடி ரூபாயாக இருக்கும். இது, 2022-23 ஆம் ஆண்டு மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 26.29 சதவீதமாக இருக்கும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டின் சதவீதத்தில் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் 2023-24 ஆம் ஆண்டில் 26.24 சதவீதமாகவும், 2024-25 ஆம் ஆண்டில் 25.93 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 15-வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது. இவ்வாறு, நிதி மேலாண்மையின்

ஒரு பகுதியாக கடன் தாங்குதன்மை இருக்க வேண்டும் என்பது மாநில அரசின் நோக்கமாகும்.

## VI. கடன் உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 31.08 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 2.79 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின்

(Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 11.83 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.06 சதவீதமாகவும் உள்ளது.

**முடிவுரை**

இந்திய பொருளாதாரம் தற்போது மந்தமான நிலையில் காணப்பட்டாலும், வருங்காலங்களில் அது முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய வலுவிழந்த பொருளாதார நிலையிலும் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட அதிகரித்துக் காணப்படுவது நமக்கு சாதகமானதாகும். இந்த வளர்ச்சி வருங்காலங்களில் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வள ஆதாரங்களை கூட்டுதல் மற்றும் திறன்மிக்க வரிவசூல் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தின் மொத்த வருவாயை வலுவான நிலையில் பராமரிக்க இயலும். வளர்ச்சிக்கான செலவினங்களின் மீது முதலீடு செய்யும் அதே வேளையில், நிதி சேர்ப்பு நடவடிக்கையை அடிப்படை கொள்கையாக கொண்டு, கடன் நிலைத்தன்மை மற்றும் வருவாய் மற்றும் செலவினங்களுக்கு இடையேயான

நிதி சமநிலையை உறுதி செய்வதன் மூலம், தமிழ்நாடு நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையறைகளின்படி வருவாய் பற்றாக்குறையை வரும் காலங்களில் குறைக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*********